## அத்தியாயம் 3

# வேளாண்மை, மீன்பிடி மற்றும் காடாக்கல்

### 3.1 பொதுவான போக்குகள்

2000ஆம் ஆண்டின் 1.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் வேளாண்மை வெளியீடு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இச்சுருக்கமானது முக்கியமாக வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவக்காற்று ஆகிய இரண்டு பருவக் காற்றுக்களும் தவறியமையினால் பெருந்தோட்டப் பயிர்களிலும் முக்கிய உணவுப் பயிர்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளினால் முக்கியமாக ஏற்பட்டதாகும். ஆண்டுப் பயிர்களின்கீழ் பயிரிடப்பட்ட பரப்பு இவ்விரண்டு போகங்களிலும் குறைவடைந்தது. நீர்ப்பாசன மற்றும் மழைநீரினால் பயிரிடப்படும் பரப்பும் பாதிக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு சிறுபோகத்தில் மழை வீழ்ச்சிப்பரம்பல் பெருமளவு ஒருபக்கச் சார்பாகவே காணப்பட்டது. தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்தின் மழை வீழ்ச்சியின் 50 இலிருந்து 70 சதவீதம் வரையானது ஏப்பிறல் மாதத்திலேயே பெறப்பட்டதோடு இது பெரும்பாலும் வரண்ட வலய மாவட்டங்களிலேயே காணப்பட்டது. வரட்சியானது தென் மாகாணத்தில் குறிப்பாக அம்பாந்தோட்டை மற்றும் உடவளவைப் பிரதேசங்களில் கடுமையாக இருந்தது.

நீண்ட வரட்சியின் காரணமாக பல்லாண்டுப் பயிர்களின் உற்பத்தியாக்கமும் பாதிக்கப்பட்டது. 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உருளைக்கிழங்கு தவிர்ந்த தேயிலை, இறப்பர், தெங்கு, நெல், கரும்பு மற்றும் ஏனைய களப்பயிர்களின் வெளியீடும் வீழ்ச்சியடைந்தது. கால்நடைத்துறை உறுதியான வளர்ச்சியைப் பதிவு செய்தது. பால், முட்டை, மற்றும் கோழி இறைச்சி

**அட்டவணை 3.1**

**முக்கிய வேளாண்மை விடயங்களின் உற்பத்தியும் விலை மாற்றங்களும்**

| விடயம் | அலகு | உற்பத்தி | | 2000/2001இல் மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | 2000 | 2001 | உற்பத்தி | விலை |
| தேயிலை | மில்.கி.கி. | 306 | 295 | -3.5 | 6.2 |
| இறப்பர் | மில்.கி.கி. | 88 | 86 | -1.8 | -0.1 |
| தெங்கு | மில்.காய்கள் | 3,096 | 2,796 | -9.7 | 10.2 |
| நெல் | '000மெ.தொ. | 2,860 | 2,695 | -5.8 | 5.1 |
| சீனி | '000மெ.தொ. | 64 | 48 | -25.0 | 12.3 |
| மீன் | '000மெ.தொ. | 304 | 285 | -6.4 | 10.3 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
தொடர்பான அதிகார சபைகள்.

உற்பத்தி போன்ற கால்நடைத்துறையின் அனைத்து முக்கிய வகைகளும் 2000ஆம் ஆண்டைவிட உயர்வாகக் காணப்பட்டன.

முன்னைய ஆண்டின் பயிர்ச் செய்கையுடன் ஒப்பிடுகையில் நெல்லின் வெளியீடு 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உருளைக் கிழங்கு தவிர்ந்த ஏனைய அனைத்துக் களப்பயிர்களும் வீழ்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டில் 78 சதவீதத்தினால் அதிகரித்த உருளைக்கிழங்கு வெளியீடு 2000ஆம்ஆண்டில் உருளைக்கிழங்கு இறக்குமதிகளின்மீது விதிக்கப்பட்ட அதிஉயர் தீர்வை வீதங்களினால் பாதுகாக்கப் பட்டமையின் காரணமாக 2001ஆம் ஆண்டில் மேலும் 19 சதவீதத்தினால் அதிகரித்தது.

2000ஆம் ஆண்டில் அதிஉயர் வெளியீட்டு மட்டங்களை எய்திய தேயிலை மற்றும் தெங்கு உற்பத்தி முறையே 3.5 சதவீதத்தினாலும் 9.7 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. கடந்த பல ஆண்டுகளாக வீழ்ச்சியடையும் போக்கினைக் கொண்டிருந்த இறப்பர் உற்பத்தி 2001ஆம் ஆண்டில் மேலும் 1.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து பதிவு செய்யப்பட்ட ஆகக்குறைந்த மட்டத்தினை எய்தியது. 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெல்வத்தை மற்றும் செவனகல ஆகிய இரு ஆலைகளிலும் சீனி வெளியீடு கரும்பு உள்ளீட்டின் பற்றாக்குறை காரணமாக வீழ்ச்சியடைந்தது.

பயிரிடப்பட்ட பரப்பில் ஏற்பட்ட குறைப்பானது வேளாண்மைத்துறையில் தொழில் வாய்ப்புக்களை குறைவடையச் செய்தது. இதன் விளைவாக கிராமியப் பிரதேசங்களில் பொருளாதார நடவடிக்கைகள் பின்னடைந்தன. விவசாயிகள், விவசாயத் தொழிற்படை மற்றும் ஆலையிடல், பதனிடல் மற்றும் பண்டங்களின் மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் போன்ற விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஆகியோரது வருவாய்களும் வீழ்ச்சியடைந்தன.

ஆண்டின் பிற்பகுதியில் அரிசி மற்றும் தெங்கு என்பனவற்றின் விலைகள் கணிசமாக அதிகரித்து பணவீக்கத்தின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலை அதிகரிப்புக்களுடன்

இணைந்து வருவாய்க் குறைப்பானது குறிப்பாக கிராமியத்துறையில் தாழ்ந்த வருமானக் குழுவின்மீது பாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருந்தது. கிராமியப் பிரதேசங்களில் பொருளாதார நடவடிக்கை மோசமடைந்தமையானது பொதுவான பொருளாதாரத்தில் பாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்தது.

## 3.2 வேளாண்மைக் கொள்கை

நீண்டகாலப் பகுதியொன்றில் வழங்கப்பட்ட பாரிய பாதுகாப்பின் காரணமாக உள்நாட்டு வேளாண்மைத்துறையின் தாழ்ந்த உற்பத்தியாக்கமானது தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக முறையொன்றுக்கு வெற்றிகரமாக சீராக்கம் செய்யப்படஇயலாது காணப்பட்டது. எனவே கடந்த அண்மைக் காலங்களில் வேளாண்மைத்துறையின் செயலாற்றம் ஏமாற்றத்தையே தந்தது. வளர்ச்சி வீதங்கள் தாழ்வாகக் காணப்பட்டன. உற்பத்தி வீழ்ச்சியும் தேங்கிய விளைச்சலும் இத்துறையின் பண்புகளாகக் காணப்பட்டன. இதற்கான ஒரேயொரு விதிவிலக்காக நெற்றுறை காணப்பட்டதுடன் இது உற்பத்தியாக்கத்தில் மேம்பாடொன்றினைக் காட்டியது. எனினும் தீர்வை அமைப்புமுறை சம்பந்தமான உறுதியான கொள்கைகள் காணப்படாமையும் அவ்வப்போதைய தீர்வை விலக்கல்களினாலும் நெற்றுறையும் பல இடர்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சிலகாலமாகப் பலதரப்பட்ட வடிவங்களில் வேளாண்மைக்கான துறைசார்ந்த சீர் திருத்தங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு வந்துள்ளன. இந்த விடயங்களிலிருந்து உருவாகும் முக்கிய பண்புகள் புதிய கொள்கை வரைச்சட்டமொன்றின் முக்கியத்துவத்தினைக் குறித்துக் காட்டுகின்றது. இவ் வரைச் சட்டத்தின் குறிக்கோளானது இந்த துறையின் பங்களிப்பினை மேம்படுத்துவதானதாகவும் அதன் மூலம் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதுமாகும். புதிய தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்ளுவதன் மூலமும் உற்பத்தியாக்கத்தினையும் போட்டித் தன்மையினையும் அதிகரிப்பதன் மூலமும் சந்தைப் பொருளாதார வலையமைப்பு ஒன்றினுள் மேம்பாடுகளை எய்துவதில் இந்த உபாயம் முயற்சி செய்தல் வேண்டும். பண்ணைத் தொழிலில் தாழ்ந்த வீதங்களிலான நவீன தொழில்நுட்பப் பாவனையும் உள்ளார்ந்த விளைச்சலுக்கும் உண்மை விளைச்சலுக்கும் இடையிலான பாரிய இடைவெளியானது இந்தத் துறையினை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதை எடுத்துக் காட்டுவதுடன் அதன் மூலம் விவசாய வருவாய்களை அதிகரிக்கச் செய்யலாம்.

விவசாயத்தில் அதிகரித்த முதலீடுகளினூடாக இத்துறையினை நவீனமயப்படுத்தி பன்முகப்படுத்துவதற்கு இந்த உபாயம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மரபுவழி உணவுப் பண்டங்கள் வருவாயின் அதிகரிப்பிற்கும் தீவிர முதலீடுகளுக்குமான வாய்ப்பினை மட்டுப்படுத்துகின்றன. எனவே முன்னுரிமைப்படுத்தல் மூலமும் பன்முகப் படுத்தலின் மூலமும் வருவாய்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை இந்தத்துறை ஆராய வேண்டும். இம்முறை வர்த்தகம் சார்ந்த தனியார்துறை முதலீடுகளைக் கவரும்.

கொள்கையின் மீதான முக்கிய வலியுறுத்தலானது அதனது செயலாற்றத்துக்காக அரசாங்கத்தின் அனுசரனையில் தங்கியிராத போட்டித்தன்மை கொண்ட விவசாயத்துறை ஒன்றினை உருவாக்குவதாகும். முக்கிய உணவுப் பண்டங்களில் தன்னிறைவை எய்துவதற்கான மரபுவழியான உள்நோக்கிய கொள்கையானது திறந்த சந்தைச் சூழலொன்றில் இயலுமான இடங்களில் உள்நாட்டுச் சந்தைக்காக போட்டித்தன்மை கொண்ட உபாயமொன்றினால் மாற்றீடு செய்யப்படவேண்டும். உள்நாட்டு உணவு உற்பத்தியானது உணவில் தன்னிறைவினை எய்துவதற்காக ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஆகக்குறைந்த மட்டங்களில் அவற்றினை பேணுவதற்காக ஊக்குவிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு அதிர்ச்சிகளின் மத்தியில் வலுவான உள்நாட்டு விவசாயத்துறையானது அதிகூடிய ஆற்றலையும் உறுதிப்பாட்டையும் வழங்குகின்றது. எனினும் உணவில் தன்னிறைவுக்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த மட்டமானது

**அட்டவணை 3.2**

2000 இல் இலங்கையிலும் இந்தியாவிலும் தெரிந்தெடுக்கப்பட்ட பயிர்களின் தேசிய சராசரி விளைச்சல்

| பயிர் | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| தேயிலை (அ | 1,840 | 2,000 |
| சிறு உடைமையாளாகள் | 2,216 | |
| இறப்பர் | 653 | 1,616 |
| கரும்பு | 60,248 | 70,617 |
| நெல் | 3,954 | 2,964 |
| மரவள்ளி | 1,089 | 1,807 |
| உருளைக்கிழங்கு | 13,500 | 18,642 |

(அ) 2001இல் திருத்தியமைக்கப்பட்டது.

மூலங்கள்: உ.வே. அமைப்பின் தரவுத்தளம்
குடிமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

துறையின் செயற்றிறனை நலிவடையச் செய்யலாகாது. பன்னாட்டுச் சந்தைகளுக்கும் வழங்கல்களை மேற்கொள்ளக்கூடிய வகையில் தரமான உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உற்பத்தியாளர்கள் தரமுயர்த்தப்படல் வேண்டும். இது தொடர்பாக முன்னுரிமைப் பயிரான அரிசி, ஒருசில களப்பயிர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பழ வர்க்கங்கள் மரக்கறி வகைகள் மரஞ்செடிகள் போன்ற ஒப்பீட்டு ரீதியான விடயங்களில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

விவசாயத்துறை ஊழியர்களின் உற்பத்தியாக்கம் பெருமளவு திருப்தியற்றதாகும். தொழிலாளர் உற்பத்தியாக்கத்தினைவிட விரைவான வேகத்தில் பண்ணைக்கூலிகள் அதிகரித்துள்ளன. இப்பொழுது விவசாயத்தில் தொழிலாளர் உற்பத்தியாக்கமானது கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் உற்பத்தியாக்கத் தினைவிட பெருமளவில் பின்தங்கி நிற்கின்றது. விவசாயத்துறையில் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்கு தனியார்துறையின் பங்கேற்பினை ஊக்குவித்து மூலதனச் செறிவுமிக்க முதலீடுகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் பாதுகாக்கப்பட்ட விவசாயத்துக்கான முதலீடுகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அலகுகள் போன்ற நவீன உபகரணங்களையும் பயன்படுத்தி உயர் பெறுமதியுடைய பயிர்களால் பயிரிடுவதும் விவசாயத்துறையில் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்தும்.

முன்னைய ஆண்டினைப் போலவே அரிசி மற்றும் சமையல் எண்ணெய் என்பனவற்றுக்கு அவ்வப்போதைய தீர்வை மாற்றங்களை அரசாங்கம் மேற்கொண்டதோடு இது பாரிய செயல்விளைவுகளைக் கொண்டிருந்தது. செத்தெம்பர் மாதத்தில் உள்நாட்டு அரிசி விலைகள் அதிகரிக்கத் தொடங்கியபோது தீர்வை அமைப்பு முறையை சீராக்கம் செய்யாது உரிமத் தேவைப்பாடுகளை அரசாங்கம் அகற்றியிருந்தால் அது மிகவும் பொருத்தமானதாக இருந்திருக்கும். விலைச் சமிக்ஞைகளுக்கு பதிலிறுப்பதற்கு தனியார் துறையினருக்கு இது அனுமதியை வழங்கி தேவையானால் இறக்குமதிகளை மேற் கொள்ளுவதற்கு இடமளித்திருக்கும். பண்டங்களின் சந்தைப்படுத்தலில் அரசாங்கத்தின் தலையீடு ஆகக் குறைந்ததாக்கப்பட வேண்டியதோடு சந்தைப் பொறிமுறையை சுமுகமாகக் கருமமாற்ற இடமளிப்பதன் மூலம் விலைகளை உறுதிப்படுத்த முடியும்.

இலங்கைத் தேயிலை மற்றும் கறுவா உற்பத்தியாளர்களுக்கு புத்தி ஜீவிகள் சொத்துரிமையை வழங்கும் விவசாய காப்புரிமைச் சட்டமொன்றினை இலங்கை வரைந்துள்ளது. வர்த்தகம் சார்ந்த புத்திஜீவிகள் சொத்துரிமை முறையின் கீழான புவியியல் குறியீடுகளின் கீழ் வைன் வகைகளுக்கும் வடிநீர்மங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள மதிப்பு கட்டார் நாட்டின் டோகா நகரத்தில் இடம் பெற்ற உலக வர்த்தக அமைப்பு கலந்துரையாடலில் எய்தப்பெற்ற உடன்பாட்டின் அடிப்படையில் இவ்விரு பயிர்களுக்கும் நீடிக்கப்படும்.

## 3.3 ஏற்றுமதிப்பயிர்கள்

### தேயிலை

இவ்வாண்டில் நிலவிய வரட்சியின் காரணமாக 1993ஆம் ஆண்டிலிருந்து தேயிலை உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட மேல்நோக்கிய போக்கு 2001ஆம் ஆண்டில் நேர்மாற்றமடைந்தது. 2000ஆம் ஆண்டில் 300 மில்லியன் கிலோக்கிராம்களை விஞ்சிய வெளியீடு 2001ஆம் ஆண்டில் 3.5 சதவீதத்தினால் 295 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. தாழ் நிலத் தேயிலையின் வெளியீடு சிறிதளவால் அதிகரித்து மொத்த வெளியீட்டின் 56 சதவீதத்திற்கு வகைகூறியது. இதற்கு மாறாக உயர்நில மற்றும் மத்திய நிலத் தேயிலைகளின் வெளியீடு இவ்வாண்டில் உயர்மற்றும் மத்திய நிலங்களின் பெரும்பாலான இடங்களில் நிலவிய வரட்சி நிலைமைகளின் காரணமான சாதகமற்ற வானிலை நிலைமைகளினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

பயிரிடப்படும் பரப்பில் 48 சதவீதத்தினைக் கட்டுப்படுத்தும் தேயிலை சிறுஉடமையாளர்துறை தேசிய வெளியீட்டின் 62 சதவீதத்திற்கு வகைகூறி சிறு உடமையாளர்களின் உற்பத்தியாக்கம் தோட்டத்துறையைவிட உயர்வானது என்பதை குறித்துக்காட்டியது. சிறு உடமையாளர்துறையின் சராசரி விளைச்சல் எக்டேயர் ஒன்றிற்கு ஏறத்தாழ 2,212 கிலோக்கிறாம்களாக இருந்த வேளையில் தோட்டத்துறையின்[1] மதிப்பிடப்பட்ட சராசரி விளைச்சல் எக்டேயர் ஒன்றுக்கு 1,365 கிலோக்கிறாம்களாக மட்டுமே இருந்தது. இது போட்டி நாடுகளான கென்யா போன்ற நாட்டின்

1. பெருந்தோட்டத்துறையின் சராரி விளைச்சல் பெருந்தோட்டக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட பயிர் செய்யப்படும் நிலங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த வேளையில் சிறு உடைமைகளின் விளைச்சல் தேயிலைச் சிறு உடைமையாளர்களினால் வழங்கப்பட்டது. இதற்கேற்ப தேசிய சராசரி விளைச்சல் திருத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 3.3
தேயிலைத் துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 1999 | 2000(அ) | 2001(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம் | 284 | 306 | 295 |
| உயர் நிலம் | மில்.கி.கிறாம் | 81 | 84 | 75 |
| மத்திய நிலம் | மில்.கி.கிறாம் | 54 | 56 | 54 |
| தாழ் நிலம் | மில்.கி.கிறாம் | 149 | 166 | 166 |
| 2. விளைச்சலகள் (இ) | | | | |
| மொத்த விளைச்சல் | '000எக்டேயர் | 180 | 180 | 180 |
| நாட்டப்பட்ட நிலப்பரப்பு | '000எக்டேயர் | 168 | 166 | 165 |
| 3. வளமாக்கிப் பாவனை | '000மெ.தொன் | 164 | 192 | 167 |
| 4. மீள் நடுகை | எக்டேயர் | -1,376 | 1,094 | 1,044 |
| 5. புதிய பயிரிடுகை | எக்டேயர் | 415 | 264 | 402 |
| 6. விலைகள் | | | | |
| கொழும்பு(தேறிய) | ரூபா/கி.கி. | 115.19 | 135.53 | 143.96 |
| ஏற்றுமதிகள்(க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 162.39 | 184.73 | 208.89 |
| 7. உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி. | 101.29 | 110.64 | 121.43 |
| 8. ஏற்றுமதிகள் | ரூ.மில்.கி.கி. | 269 | 288 | 295 |
| 9. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 43,728 | 53,133 | 61,602 |
| | அ.டொ.மில். | 621 | 700 | 690 |
| 10. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) | | 2.2 | 2.6 | 2.3 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை
தேசிய வளமாக்கிச் செயலகம்
தேயிலை சிறுஉடைமையாளர் அதிகாரசபை
பெருந்தோட்டக் கம்பனிகள்
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை)
(இ) தேயிலை ஆணையாளர் பிரிவினால் 1999இல் நடாத்தப்பட்ட பெருந்தோட்ட அளவீட்டின் அடிப்படையில் பரப்பளவு திருத்தியமைக்கப்பட்டது. (கைவிடப்பட்ட தேயிலை நிலங்கள் உள்ளடங்காது)
(ஈ) பெருந்தோட்டக் கம்பனிகளினாலும் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டன.
(உ) கொழுந்துத் தேயிலையை வழங்குபவர்களின் இலாப அளவையும் உள்ளடக்குகின்றது.
(ஊ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.


சராசரி விளைச்சலைவிட மிகவும் தாழ்ந்ததாகும். தாழ் நிலங்களில் முக்கியமாக செறிந்துள்ள சிறு உடைமையாளர்களின் பதியம் செய்யப்பட்ட உயர்விளைச்சலைக் கொண்ட தேயிலையுடன் ஒப்பிடுகையில் தோட்டத்துறையில் கணிசமான பரப்பளவில் இன்னமும் தாழ்ந்த விளைச்சலைக் கொண்ட விதைகளே பயிரிடப்படுகின்றன. குறிப்பாக தாழ் நிலப் பிரதேசங்களில் தொழிலாளர்களின் பற்றாக்குறையானது பெருந்தோட்டத்துறையின் கடுமையான பிரச்சனையொன்றாகக் காணப்படுகின்றது. தொழிலாளர் பற்றாக்குறையை இலகுபடுத்துவதற்காகவும் உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்காகவும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் கையினால் இயக்கக்கூடிய செடி கத்தரிக்கும் மற்றும் அறுவடை செய்யும் இயந்திரமொன்றினைக் கண்டுபிடித்துள்ளது. எனினும் இந்த இயந்திரம் பயிர்ச்செய்கையாளர்களுக்கிடையில் இன்னமும் பிரபல்யம் அடையவில்லை.

இவ்வாண்டில் நிலவிய வரட்சி நிலைமையின் காரணமாக மீள்பயிரிடல் மற்றும் புதிய பயிரிடல் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. அத்துடன் கடந்த சில ஆண்டுகளாக பழைய தேயிலைச் செடிகளைப் பிடுங்கி விடுவதை ஊக்கமிழக்கச் செய்த கவர்ச்சிகரமான விலைகளும் மீள்நடுகை நடவடிக்கைகளைப் பாதித்தன. விலைகள் கவர்ச்சிகரமாகக் காணப்படும்போது செடிகளைப் பிடுங்குவதானது பயிர் இழப்பின் ஊடாக கணிசமான வருவாய் இழப்பை ஏற்படுத்தும். எனவே பயிர்ச்செய்கையாளர் சிலர் அவர்களது மீள்நடுகை நடவடிக்கைகளைப் பிற்போட்டிருப்பதாகத் தோன்றுகின்றது. இதன் விளைவாக இவ்வாண்டில் மீள்நடுகை மேற்கொள்ளப்பட்ட பரப்பு 1,044 எக்டேயர் மட்டுமேயாகும்.

2001ஆம் ஆண்டில் தோட்ட மட்டத்தில் தேயிலையின் உற்பத்திச் செலவு ஏறத்தாழ 10 சதவீதத்தினால் அதிகரித்தன. 2001ஆம் ஆண்டு மாச்சு மாதத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு எரிபொருள் மின்சாரக் கட்டணங்களின் அதிகரிப்பு, ரூபா பெறுமானத் தேய்வடைந்ததைத் தொடர்ந்து பசளை மற்றும் விவசாய இரசாயனங்களின் விலை அதிகரிப்பு போன்ற பல காரணிகள் இதற்குக் காரணமாயின. ஆண்டின் தொடக்கத்தில் தோட்டத் தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளும் பெருந்தோட்டக் கம்பனிகளின் தேயிலை உற்பத்தியைப் பாதித்தது.

வெட்டி கிழித்து சுருட்டப்பட்ட தேயிலையின் உற்பத்தியும் சிறிதளவு பின்னடைவினைக் கொண்டிருந்தது. அதிகரித்த உலக வழங்கலின் காரணமாக சீரீசீ தேயிலைக்கான விலைகள் சாதகமாகக் காணப்படாமையே இதற்கான காரணமாகும். எனவே சீரீசீ தேயிலை உற்பத்தி 2 சதவீதத்தினால் 17.1 மில்லியன் கிலோக்கிறாம் களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் கலவை செய்வதற்காகவும் மீள் ஏற்றுமதிக்காகவும் இறக்குமதி செய்யப்பட்ட சீரீசீ தேயிலையும் 2001ஆம்

வரைபடம் 3.1
விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - தேயிலை
(1990 = 100)



ஆண்டில் 3.7 சதவீதத்தினால் 2.7 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. சீரீசீ தேயிலையின் விலை வீழ்ச்சியைத் தவிர்ப்பதற்காக சீரீசீ தேயிலை உற்பத்தியை கட்டுப்படுத்துவதற்கு இந்தியா திட்டமிட்டுவருகின்றது.

தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்தபோதிலும் 2001ஆம் ஆண்டில் கொழும்பு ஏலங்களில் வர்த்தகம் செய்யப்பட்ட அளவும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவும் அதிகரித்தன. கடந்த ஆண்டின் முன்கொண்டு வரப்பட்ட இருப்புக்கள் இவ்வாண்டு ஏலங்களுக்குள் நுழைந்தமையே இதற்கான காரணமாகும். எனினும் ஐ.அ.டொலர் நியதிகளில் 2001ஆம் ஆண்டில் கொழும்பு ஏல ஆண்டுச்சராசரி விலை 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உலக விலைகள் வீழ்ச்சியடைந்தமையே இதற்கான காரணமாகும். ஏற்றுமதி அளவுகளின் 2 சதவீத அதிகரிப்பின் மத்தியிலும் சராசரி ஏற்றுமதி விலையின் 3.6 சதவீத வீழ்ச்சியொன்றின் காரணமாக ஐ.அ.டொலர் நியதிகளில் ஏற்றுமதி வருவாய்கள் 1 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 690 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. எனினும் ரூபா நியதிகளில் தேயிலையிலிருந்தான வருவாய்கள் 16 சதவீதத்தினால் ரூபா 61 பில்லியனை விஞ்சின. பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளின் பங்கு 2000ஆம் ஆண்டின் 37 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 40 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்வாண்டில் ஏற்றுமதியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் அதேபோன்று தேயிலை ஊக்குவிப்புப் பணியகத்தினால் வழங்கப்பட்ட ஆதரவுமே இதற்கான காரணமாகும். தேயிலையின் பெறுமதி கூட்டலை அதிகரிப்பதற்காக களஞ்சிய மற்றும் பொதியிடல் வசதிகளை நவீனமயப்படுத்துவதற்காக தனியார்துறையின் முக்கிய பங்கொன்றினை ஆற்றுவதைக் குறிப்பிடுவது ஊக்கமூட்டும் விடயமாக உள்ளது. இந்த சூழலில் இலங்கையின் பாரிய தேயிலை ஏற்றுமதியாளர்கள் தத்தமது சொந்த வர்த்தக அடையாளம் பெயர்களை அபிவிருத்தி செய்வதானது இலங்கைத் தேயிலைக்கான உறுதியான சந்தையொன்றைப் பேணுவதற்கு ஏதுவாகும்.

உள்ளீடுகள் ஆலோசனைகள், விரிவாக்கப் பணிகள் என்பனவற்றை வழங்குவதன் மூலமும் மீள் பயிரிடலையும் புதிய பயிரிடலையும் ஊக்குவிப்பதற்காக பலதரப்பட்ட உதவிக் கொடுப்பனவுத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் மூலமும் தேயிலை சிறுஉடைமை அபிவிருத்தி அதிகாரசபை தேயிலை சிறு உடமையாளர்களுக்கு தொடர்ந்தும் உதவி வழங்கியது. உறுப்பினர்களுக்கு சமூக பாதுகாப்பினை வழங்குவதற்காகவும் தேயிலை சக்தி செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்குமாக 1997இல் தொடக்கி வைக்கப்பட்ட "தேயிலை சக்தி நிதியம்"2001ஆம் ஆண்டின் இறுதியில் 1,35,836 உறுப்பினர்களையும், ரூபா 121 மில்லியன் சேமிப்புக்களையும் கொண்டிருந்தது. சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டத்தின் கீழ் சிறு உடைமையாளர்களுக்கு ரூ.28.5 மில்லியன் கொண்ட தொகையொன்று செலுத்தப்பட்டது.

## இறப்பர்

கடந்த காலத்தில் வீழ்ச்சியுறும் போக்கினைக் கொண்டிருந்த இறப்பர் உற்பத்தி 2001ஆம் ஆண்டில் மேலும் 1.8 சதவீதத்தினால் 86 மில்லியன் கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்து மிகத் தாழ்ந்த வெளியீட்டினைப் பதிவு செய்தது. 63 சதவீதமாகக் காணப்பட்ட சிறு உடைமையாளர்களின் பங்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியது. தேசிய வெளியீட்டின் வீழ்ச்சி, இரு துறைகளிலிலுமிருந்தே ஏற்பட்டது. சிறு உடைமையாளர் உற்பத்தி 2 சதவீதத்தினால் 53.7

**அட்டவணை 3.4**
**இறப்பர்த்துறையின் மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1999 | 2000(அ) | 20001ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம் | 96 | 97 | 87 |
| 2. பரப்பளவு (இ) | | | | |
| பயிர்செய்கைக்குட்பட்ட | '000 எக்டேயர் | 158 | 159 | 158 |
| பால் எடுக்கும் | '000 எக்டேயர் | 125 | 128 | 125 |
| 3. விளைச்சல் | கி.கி./எக்டேயர் | 768 | 755 | 694 |
| 4. வளமாக்கிப் பயன்பாடு | '000 மெ.தொன் | 15 | 11 | 13 |
| 5. மீள் நடுகை (ஈ) | எக்டேயர் | 1,160 | 643 | 793 |
| 6. புதிய பயிரிடுகை (ஈ) | எக்டேயர் | 515 | 218 | 251 |
| 7. விலைகள் | | | | |
| ஏற்றுமதிகள் (க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 67.72 | 53.90 | 66.15 |
| கொழும்பு ஆர்.எஸ்.எஸ்.1 | ரூபா/கி.கி. | 49.76 | 45.33 | 54.91 |
| 8. உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி. | 42.00 | 43.50 | 44.50 |
| 9. ஏற்றுமதிகள் | மில்.கி.கிறாம் | 41 | 43 | 36 |
| 10. உள்நாட்டு நுகர்வு | மில்.கி.கிறாம் | 54 | 54 | 55 |
| 11. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 2,808 | 2,305 | 2,179 |
| | அ.டொ.மில். | 44 | 33 | 29 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தியின்சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி(உ) | | 0.5 | 0.4 | 0.4 |

மூலங்கள்: இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.


(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) 1993இல் குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு மீதான அளவையின் அடிப்படையில் அமைந்தது.
(ஈ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச் செய்கை உதவித் திட்டத்தின் கீழான நிலப்பரப்பு.
(உ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக பெருந்தோட்டக் கம்பனிகளின் வெளியீடு 1 சதவீதத்தினால் 32.3 மில்லியன் கிலோக் கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

மோசமான உள்நாட்டு விலைகளின் காரணமாக சில பிரதேசங்களில் பால் எடுத்தல், கைவிடப்பட்டமையினால் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின்படி, 8,200 இற்கு மேற்பட்ட எக்டேயர்களில் பால் எடுத்தல் கைவிடப்பட்டுள்ளது. இது மொத்த பால் எடுக்கும் பரப்பில் 6 சதவீதமாகும். பால் எடுத்தலுக்காக தொழிலாளர்களை தொழிலில் ஈடுபடுத்திய சில சிறு உடைமையாளர்களுக்கு கூலிச் செலவினைக்கூட ஈடுசெய்யமுடியவில்லை. குறிப்பிடத்தக்க காலமாக குறைந்த விலைகள் காணப்பட்டமையின் காரணமாக தமது காணிகளை பொருத்தமான முறையில் பேண இயலாதிருந்தது.

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி பால் எடுக்கக்கூடிய நிலப்பரப்பு அதிகரித்துள்ளது. ஏறத்தாழ 7 - 8 ஆண்டுகளுக்கு முன்னர் மீள்நடுகை மேற் கொள்ளப்பட்ட பிரதேசங்கள் பால் எடுக்கும் கட்டத்தை எய்தியுள்ளமையே இதற்கான காரணமாகும். இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் உயர் விளைச்சலைக் கொண்ட பதியங்களை அறிமுகப்படுத்தியுள்ள போதிலும் மோசமான முகாமைத்துவம் மற்றும் தாழ்ந்த விலைகளின் காரணமாக பால் எடுத்தல் கைவிடப்பட்டமை என்பனவற்றின் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக தேசிய இறப்பர் விளைச்சல் வீழ்ச்சியுறும் போக்கினைக் கொண்டிருந்தது. 1996ஆம் ஆண்டிலிருந்து வீழ்ச்சியுறும் போக்கினைக் கொண்டிருந்த தேசிய விளைச்சல் மட்டங்கள் மேலும் 4 சதவீதத்தினால் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து 2001ஆம் ஆண்டில் எப்பொழுதுமே பதியப்படாத தாழ்ந்த மட்டங்களை எய்தின.

வரைபடம் 3.2
விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - இறப்பர்
(1990 = 100)




2001ஆம் ஆண்டில் இறப்பர் துறையின் தாழ்ந்த வெளியீடானது மறுபுறத்தில் ஏற்றுமதி அளவினைக் குறைத்தது. கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துச் சென்ற கைத்தொழில் துறையில் இறப்பரின் உள்நாட்டு நுகர்வு உள்நாட்டுக் கைத்தொழில்துறையின் மெதுவான வளர்ச்சியின் காரணமாக 2 சதவீதத்தினால் 54 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில்துறையில் இறப்பரின் நுகர்வு உள்நாட்டு இறப்பர் உற்பத்தியின் 63 சதவீதத்துக்கு வகைகூறியது. 2001ஆம் ஆண்டில் இலங்கையின் இறப்பர் ஏற்றுமதி 2 சதவீதத்தினால் 32 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

கிலோக்கிறாம் ஒன்றுக்கான (ஆர்எஸ்எஸ்) சராசரி விலையான ரூ.54.70 உடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் இறப்பரின் உற்பத்திச் செலவு கிலோக்கிறாம் ஒன்றுக்கு 8 சதவீதத்தினால் ரூ.48 இற்கு அதிகரித்தது. இயற்கை இறப்பருக்கான பன்னாட்டு மற்றும் உள்நாட்டு கேள்வி உலகளாவிய பொருளாதார பின்னடைவின் காரணமாக 2001ஆம் ஆண்டில் தாழ்ந்து காணப்பட்டது.

இவ்வாண்டில் இயற்கை இறப்பர் மற்றும் செயற்கை இறப்பர் ஆகியவற்றின் இறக்குமதிகள் முறையே 78 சதவீதத்தினால் 0.7 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கும் 10 சதவீதத்தினால் 15 மில்லியன் கிலோக் கிறாம்களுக்கும் வீழ்ச்சியடைந்தன.

2001ஆம் ஆண்டில் இயற்கை இறப்பரின் பன்னாட்டு விலைகள் வீழ்ச்சியடைந்தன. சிங்கப்பூர் சந்தையில் இயற்கை இறப்பரின் (ஆர்எஸ்எஸ்) விலை 11 சதவீதத்தினால் மெற்றிக் தொன்னொன்று சிங்கப்பூர் டொலர் 1,030 இற்கு வீழ்ச்சியடைந்தது. 2001ஆம் ஆண்டில் கொழும்பு ஏலங்களில் கிறேப் இறப்பரின் அனைத்துத் தரங்களினதும் சராசரி விலை வீழ்ச்சியடைந்தது. அனைத்துத்தர இறப்பரினதும் சராசரி ஏற்றுமதிவிலை கி.கிறாமொன்றுக்கு ரூ.66.35இற்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

இயற்கை இறப்பர் வழங்கலின் உலகளாவிய மிகையின் காரணமாக இயற்கை இறப்பருக்கான பன்னாட்டு விலைகள் தாழ்ந்து காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதார பின்னடைவின் காரணமாக

மோட்டார் வாகனக் கைத்தொழில் பெருமளவு பாதிக்கப்பட்டமையினால் இயற்கை இறப்பருக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தது. இறப்பருக்கான வெளித்தோற்றப்பாடு பிரகாசமின்றிக் காணப்படுகின்றவேளையில் அண்மிய எதிர்காலத்தில் விலைகள் கணிசமாக மேம்பாடடையும் என எதிர்பார்க்கப்படவில்லை.

பன்னாட்டு மட்டத்தில் இயற்கை இறப்பருக்கு நல்ல விலையொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்காக முக்கிய உற்பத்தியாளர்கள் தமது உபாயங்களை மாற்றிக் கொண்டு வருகின்றனர். இயற்கை இறப்பரின் உலக வழங்கலை முகாமைப்படுத்துவதற்காக முக்கிய இறப்பர் உற்பத்தியாளர்களான தாய்லாந்து இந்தோனேசியா மலேசியா போன்ற நாடுகள் 2001ஆம் ஆண்டில் "முக்கூட்டு இறப்பர் கூட்டுத்தாபனம்" என்ற பெயரில் தோழமை அமைப்பு ஒன்றினை நிறுவுவதற்கு இணக்கம் கண்டுள்ளனர்.

துருசவிய திட்டம் தொடர்பான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின்கீழ் 2000ஆம் ஆண்டு யூலை 12ஆம் நாள் தனியான அமைப்பு ஒன்றாக "துருசவிய நிதியம்" நிறுவப்பட்டது. கிராமிய, பிரதேச மற்றும் தேசிய மட்டங்களில் சங்கங்களை நிறுவுவதன் மூலம் அதனது குறிக்கோள்களை எய்துவதற்கு நிதியம் எதிர்பார்க்கின்றது.

இலங்கையானது உலகின் பாரிய கைத்தொழில் ரயர் தயாரிப்பாளராகும். இதற்கு மேலதிகமாக அறுவைச் சிகிச்சை மற்றும் கைத்தொழில் கையுறைகள், காற்றடைக்கப்பட்ட ரயர்கள் மற்றும் ரியூப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பலதரப்பட்ட இறப்பர் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 2001ஆம் ஆண்டில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய் ஐ.அ.டொலர் 172 மில்லியனாகக் காணப்பட்டது.

இறப்பர் கைத்தொழிலானது லேட்டெக்ஸ் பதனிடலுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. தளபாடங்கள் தளமிடுவதற்கான பலகைகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் அலங்காரப் பொருட்களின் தயாரிப்பாகவும் பதனிடப்பட்ட இறப்பர் பலகைகள் பயன்படுத்தப்படுகின்றன. பகுதியளவில் பதனிடப்பட்ட இறப்பர் பலகைகள் முக்கியமாக குமிழ் வடிவங்கள் மற்றும் தூரிகை கைப்பிடிகள் போன்றவற்றின் தயாரிப்புக்காக பயன்படுத்தப் படுகின்றன. இவ்வாண்டில் கைத்தொழில் துறையின் பொதுவான பின்னடைவின் காரணமாக இறப்பர் பலகை கைத்தொழில் பாதிக்கப்பட்டது. பதனிடப்படாத இறப்பர் பலகை அடைப்புச் சட்டங்கள் எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

## தெங்கு

2,796 மில்லியன் காய்களாக மதிப்பிடப்பட்ட 2001ஆம் ஆண்டின் தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உச்ச வெளியீட்டினைவிட 9.7 சதவீதம் குறைவானதாகும். வெளியீட்டின் குறைப்புக்கு 2000ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் குறிப்பாக "தெங்கு முக்கோணப்" பகுதியில் பெறப்பட்ட குறைந்த மழை வீழ்ச்சியின் காலங்கடந்த தாக்கமும் அதேபோன்று


**அட்டவணை 3.5**
**தெங்குத்துறையின் புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1999 | 2000(அ) | 2001(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (இ) | மில்.காய்கள் | 2,828 | 3,096 | 2,796 |
| தேங்காய்த்துருவல் | மில்.காய்கள்(ஈ) | 541 | 712 | 408 |
| தேங்காய் எண்ணெய் | மில்.காய்கள்(ஈ) | 309 | 391 | 566 |
| உலர்த்திய தேங்காய் (உ) | மில்.காய்கள்(ஈ) | 62 | 84 | 85 |
| உடன்காய் ஏற்றுமதிகள் | மில்.காய்கள் | 21 | 29 | 27 |
| உளநாட்டுதேங்காய்நுகர்வு(ஊ) | மில்.காய்கள் | 1,799 | 1,849 | 1,872 |
| தெங்கு களிம்பு, தேங்காய்பால்மா ஏற்றுமதிகள் | மில்.காய்கள்(ஈ) | 25 | 31 | 30 |
| 2. மொத்த நிலப்பரப்பு | '000 எகடேயர் | 439 | 439 | 439 |
| 3. மீளப் பயிரிடல்/கீழ்ப் பயிரிடல் | எக்டேயர் | 698 | 714 | 867 |
| 4. புதிய பயிரிடல் (எ) | எகடேயா | 660 | 834 | 993 |
| 5. வளமாக்கிப் பாவனை | '000மெ.தொன் | 39 | 34 | 30 |
| 6. உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 2.68 | 3.27 | 3.50 |
| 7. உடன்காயொன்றின் சில்லறை விலை | காய்க்கு ரூபா | 11.95 | 9.04 | 10.50 |
| 8. சராசரி ஏற்றுமதி விலை (க.ஏ.பெ.) | காய்க்கு ரூபா | 9.95 | 7.35 | 7.05 |
| 9. ஏற்றுமதி வருவாய் | ரூ.மில். | 9,119 | 9,174 | 7,348 |
| | ஐ.டொ.மில். | 129 | 121 | 82 |
| உள்வீட்டு உற்பத்திகள் (ஏ) | ரூ.மில். | 5,973 | 5,786 | 3,639 |
| | ஐ.டொ.மில். | 84 | 77 | 41 |
| ஏனைய உற்பத்திகள் | ரூ.மில். | 3,146 | 3,388 | 3,709 |
| | ஐ.டொ.மில். | 45 | 45 | 4.2 |
| 10. மொ.உ.உ.இன் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஐ) | | 32 | 2.2 | 2.0 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை.
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காயின் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்க மாட்டாது.)
(ஈ) தெங்காய்க்குச் சமமான
1 மெற்.தொன் தேங்காய்த்துருவல் =8,000 காய்கள்.
1 மெற்.தொன் எண்ணெய் =8,800 காய்கள்.
1 மெற்.தொன் உலர்த்திய தேங்காய் =5,775 காய்கள்.
1 மெற்.தொன் தெங்கு களிம்பு பால்மா =8,000 காய்கள்
(உ) ஏற்றுமதிகள் மட்டும்.
(ஊ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 94.8 காய்கள் என மதிப்பிடப்பட்டது. கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டவை தவிர.
(எ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்வீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஐ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

**வரைபடம் 3.3**
**விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - தெங்கு**
**(1990 = 100)**




2001ஆம் ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதிகளில் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகளுமே காரணமாகக் குறிப்பிடப் படுகின்றது. 2000ஆம் ஆண்டிலும் 2001ஆம் ஆண்டிலும் வளமாக்கிப் பிரயோகத்தின் குறைப்பும் 2001ஆம் ஆண்டின் வெளியீட்டில் எதிர்க்கணிய தாக்கமொன்றைக் கொண்டிருந்தது. வெளியீட்டுக் குறைப்பின் காரணமாக ஆண்டின் பிற்பகுதியில் தேங்காயின் விலை கடுமையாக அதிகரித்தது. இந்தப் பற்றாக்குறையினை எதிர்கொள்ளுவதற்காக இவ்வாண்டில் ஏற்றுமதி ஊக்குவிப்புக்கான தற்காலிக இறக்குமதித் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 1000 மெற்றிக் தொன் உலர்த்திய தேங்காய் இறக்குமதி செய்யப்பட்டது.

எனினும் இவ்வாண்டில் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குச் சமமான காய்களின் எண்ணிக்கை 45 சதவீதத்தினால் 566 மில்லியன் காய்களுக்கு அதிகரித்தது. ஏனைய சமையல் எண்ணெய்களுக்கான அதிகரித்த இறக்குமதித் தீர்வைகளின் மூலம் எண்ணெய் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பானது தேங்காய் எண்ணெய் உற்பத்தியை ஊக்குவித்தது. அதிகரித்த இறக்குமதித் தீர்வை விதிப்புக்கு முன்பதாக தொழிற்படாத பல ஆலைகள் ஆலையிடலைத் தொடங்கியதோடு எண்ணெய்யின் அதிகரித்த வெளியீட்டுக்கு உறுதியான பங்களிப்பினை வழங்கின. இதே வேளையில் உலர்த்திய தேங்காய்த்துருவல் உற்பத்தி எண்ணெய்க் கைத்தொழிலினால் ஏற்பட்ட கடுமையான போட்டியின் காரணமாக பின்னடைவொன்றினை அனுபவித்தது. இதன் விளைவாக உலர்த்திய தேங்காய்த் துருவலின் உள்நாட்டு உற்பத்தி 43 சதவீதத்தினால் 51,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலதிகமாக உலர்த்திய தேங்காய்த் துருவலுக்கான பன்னாட்டு விலைகள் அதிகரித்த உலக வெளியீட்டின் காரணமாக ஆண்டின் பெரும்பாலான பகுதிகளில் தாழ்வாகக் காணப்பட்டன. 2001ஆம் ஆண்டு திசெம்பர் காலப்பகுதியில் உலர்த்திய தேங்காய்த்துருவலின் ஏற்றுமதிவிலை (காஏபெ) மெற்றிக் தொன் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 775 ஆகக் காணப்பட்டவேளையில் பிலிப்பைன் தேசத்துடன் ஒப்பிடத்தக்க விலை ஏறத்தாழ ஐ.அ.டொலர் 700 ஆகக் காணப்பட்டது. இதே வேளையில் இந்தோனேசியாவில் இது ஏறத்தாழ ஐ.அ.டொலர் 600ஆக இருந்தது. இதன் விளைவாக 2001ஆம் ஆண்டில் மத்திய கிழக்குச் சந்தையின் பாரிய பாகமொன்றினை இலங்கை இழக்கவேண்டி நேரிட்டது. இதனைத் தொடர்ந்து உலர்த்திய தேங்காய்த்துருவல் ஏற்றுமதி 40 சதவீதத்தினால் ஏறத்தாழ 50,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. உற்பத்தி வீழ்ச்சியுடன் காய்களின் விலை அதிகரித்தமையினால் உடன்காய்களின் ஏற்றுமதி 7 சதவீதத்தினால் 27 மில்லியன் காய்களுக்கு வீழ்ச்சியடைந்தன. தேங்காய் களிம்பு மற்றும் தேங்காய்ப்பால் மாவின் ஏற்றுமதிகள் 3 சதவீதத்தினால் 30 மில்லியன் காய்களுக்குச் சமமாக வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக உலர்த்திய தேங்காயின் ஏற்றுமதி 1 சதவீதத்தினால் 85 மில்லியன் காய்களுக்குச் சமமாக அதிகரித்தது.

ஆண்டின் தொடக்கத்தில் மிகத் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்ட அனைத்து மூன்று தெங்கு உள்ளீட்டு பொருட்களினதும் விலைகள் ஆண்டின் இறுதியில் காய்களின் வழங்கலில் காணப்பட்ட பற்றாக்குறையின் காரணமாக கணிசமான அளவில் மேம்பாடடைந்தன. சனவரியில் கிலோக்கிறாம் ஒன்று ரூ.44.17 ஆகக் காணப்பட்ட தேங்காயெண்ணெய்யின் விலை திசெம்பர் அளவில் இரு மடங்குக்கும் மேலாக அதிகரித்து கிலோக்கிறாம் ஒன்று ரூ.94.38 இனை எய்தியது. இதே போன்று இதே காலப்பகுதியில் உலர்த்திய தேங்காய் மற்றும் உலர்த்திய தேங்காய்த்துருவல் என்பனவற்றின் விலையும் முறையே 94 சதவீதத்தினாலும் 85 சதவீதத்தினாலும் கிலோக்கிறாம் ஒன்று ரூ.71.36 இற்கும் ரூ.76.25இற்கும் அதிகரித்தன.

முன்னைய ஆண்டில் 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த உள்ளீட்டுப் பொருட்களின் சராசரி ஏற்றுமதி விலை (கஏபெ) 2001ஆம் ஆண்டில் மேலும் 4 சதவீதத்தினால் காயொன்று ரூ.7.05இற்கு வீழ்ச்சியடைந்தது. உள்ளீட்டுப் பொருட்களின் அளவு மற்றும் பெறுமதி என்பனவற்றில் காணப்பட்ட வீழ்ச்சியானது ரூபா நியதிகளில் ஏற்றுமதி வருவாய்களில் 37 சதவீத வீழ்ச்சியினை விளைவித்தது.

இவ்வாண்டில் தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை மீள் பயிரிடல் புதிய பயிரிடல் மற்றும் வீட்டுத் தோட்டங்கள் என்பனவற்றுக்கான தீர்வை ஆதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக ரூ.64 மில்லியன் "கப்ருக ஆயோஜன" கடன் திட்டத்தின் கீழ் 688 எக்டேயர் பரப்புக்கு நன்மையளிக்கும் வகையில் 445 பயிர்ச் செய்கையாளர்களுக்கிடையே மேலும் ரூ.42 மில்லியன் கொண்ட தொகையொன்று பகிர்ந்தளிக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டில் களப்பயிரிடலுக்காக புதிதாக விதந்துரைக்கப்பட்ட சீஆர்அய்எஸ்எல் 98 என்ற 6000 விதைகளை தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் வழங்கியது.

## ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள்

கறிவாசனைப் பொருட்கள் தயாரிக்கப் படாத புகையிலை, பாக்கு, மரமுந்திரிகை, அத்தியாவசிய எண்ணெய் வகைகள் மலர்ச் செடிகள் மற்றும் வெட்டிய பூக்கள் போன்றவற்றை உள்ளடக்கிய ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள்துறை 2001ஆம் ஆண்டில் கலப்பான செயலாற்ற மொன்றைப் பதிவு செய்தது. எனினும் முன்னைய ஆண்டினைப் போலவே இத் துறையானது ஏற்றுமதி வருவாய்களுக்கு கணிசமான பங்களிப்பைச் செய்ததோடு இறப்பர் மற்றும் தெங்கு என்பனவற்றின் இணைந்த ஏற்றுமதி வருவாயினையும் விஞ்சியது. 2001ஆம் ஆண்டில் இத்துறையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 3 சதவீதத்தினால் ரூ.12,174 மில்லியனுக்கு அதிகரித்தது.

இந்தப் பயிர்களில் அதிமுக்கியமானது கறுவாவாகும். 2001ஆம் ஆண்டில் கறுவாவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ரூ.3.9 பில்லியனாக விளங்கி இந்த வகையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் 30 சதவீதத்திற்கும் மேலாக வகை கூறியது. உலகிலேயே கறுவாவின் பாரிய உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளரும் இலங்கையாகும். 2001ஆம் ஆண்டில் கறுவா உற்பத்தி 17 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சுத்திகரிக்கப்படாத வடிவில் ஏற்றுமதி அளவு 3 சதவீதத்தினால் அதிகரித்தது. பண்ணை அடிமட்ட விலைகளினதும் ஏற்றுமதி விலைகளினதும் மேம்பாடானது அதிகரித்த உற்பத்திக்கு உறுதியாக பங்களிப்புச் செய்தது. இவ்வாண்டில் 130 மெற்றிக் தொன் கருவா இலைகளினதும் கறுவாப்பட்டை எண்ணெய்யினதும் ஏற்றுமதியின் மூலம் ஏறத்தாழ ரூ.250 மில்லியன் வருவாயாகப் பெறப்பட்டது.

**அட்டவணை 3.6**
**ஏனைய ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1999 | 2000(அ) | 2001(ஆ) |
|---|---|---|---|
| கோப்பி | 3,249 | 2,540 | 2,400 |
| கொக்கோ | 1,147 | 1,300 | 1,275 |
| கருவாச்சுருள் | 13,466 | 13,490 | 16,000 |
| மிளகு | 9,284 | 10,676 | 7,650 |
| கராம்பு | 4,181 | 1,700 | 2,700 |
| ஏலம் | 74 | 62 | 60 |
| சாதிக்காயும் சாதிப்பத்திரியும் | 1,221 | 1,100 | 1,050 |
| மரமுந்திரி | 1,014 | 935 | 1,239 |

மூலங்கள்: இலங்கை வேளாண்மை ஏற்றுமதித் திணைக்களம்.
இலங்கை முந்திரிகைக் கூட்டுத்தாபனம்

(அ) திருத்தியமைக்கப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.

தரமான கறுவாயின் பாரிய உற்பத்தியாளர் என்ற வகையில் அதனது நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக பயிர்ச் செய்கையிலும் பெறுமதி கூட்டலிலும் பெருமளவு வர்த்தகம் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவது அத்தியாவசிய மாகும். எனினும் ஏனைய பெருந்தோட்டத் துறையினைப் போலவே தொழிலாளரின் பற்றாக்குறையே கறுவாக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு முக்கிய தடையாக உள்ளது. கருவாப்பட்டை உரித்து எடுத்தலானது பெருமளவில் சிறப்பியல்பு வாய்ந்த தொழில் ஒன்றாகையால் இப்பிரச்சனை மேலும் கடினமாக உள்ளது.

2000ஆம் ஆண்டில் கணிசமாக அதிகரித்த மிளகு உற்பத்தி மாற்று விளைச்சலின் காரணமாக 28 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2001ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட பரப்பு அதிகரித்த போதிலும் சாதகமற்ற வானிலை நிலைமைகள் எதிர்க்கணிய தாக்கமொன்றைக் கொண்டிருந்தன. அதிகரித்த உலக உற்பத்தியின் காரணமாக விலைகள் மோசமடைந்தமையினால் ஏற்றுமதி அளவு 56 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வியட்நாம் தேசத்தின் கணிசமான உயர் வெளியீடானது உலக விலைகளின் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்த போக்கினைக் கொண்டிருந்த மிளகு மீள்பயிரிடல் ஏற்றுமதி விவசாய திணைக்களத் தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி விவசாய உதவித் திட்டத்தின் கீழ் 2001ஆம் ஆண்டில் மேலும் அதிகரித்தது.

உலக சந்தையில் அதிகவர்ச்சிகரமான விலைகளின் காரணமாக கராம்பு ஏற்றுமதி இருமடங்காகியது. மடகாஸ்கார் தேசத்தில் உற்பத்தி வீழ்ச்சியைத் தொடர்ந்து இந்தோனேசியா விலிருந்தான அதிகரித்த கேள்வியானது உலக

விலைகளின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தது. இந்தியாவுடனான இலங்கையின் முன்னுரிமைத் தீர்வை வீதங்களும் ஏற்றுமதிகளின் அதிகரிப்புக்கு உதவின. கடந்த சில ஆண்டுகளாக நிலவிய கவர்ச்சிகரமான பண்ணைமட்ட விலைகளும் வளமாக்கிப் பிரயோகத்தினை அதிகரிப்பதற்கும் சிறந்த முகாமைத்துவ பிரயோகங்களைப் பயன்படுத்துவதற்கும் ஊக்கமளித்தன. இதன் விளைவாக 2001ஆம் ஆண்டில் கராம்பின் வெளியீடு 59 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை சிறந்தரக கறி வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்தபோதிலும் அளவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கறிவாசனைப் பொருட்களில் பல வீட்டுத் தோட்டங்களிலும் சிறிய காணித்துண்டுகளிலுமே பயிரிடப்படுகின்றன. கறிவாசனைப் பொருட்கள் துறையில் தனியான பயிராகவோ அல்லது கலப்புப் பயிராகவோ கறிவாசனைப் பொருட்களின் பாரிய அளவிலான பயிரிடலை ஊக்குவிப்பது அவசியமாகும். சில பெருந்தோட்டக் கம்பனிகள் தமது கைவிடப்பட்ட நிலங்களில் கறிவாசனைப் பொருட்களின் பயிரிடலுக்கு பன்முகப்படுத்துவது ஊக்கமூட்டும் செயல் ஒன்றாக விளங்குகின்றது. உற்பத்தியாக்கமற்ற மரபுவழி பெருந் தோட்டங்களை பெருமளவு இலாபம் மிக்க கறிவாசனைப் பொருட்களின் பயிரிடலுக்காகவும் பதனிடலுக்காகவும் தொழில் நுட்பத்தகவல் களையும் விரிவாக்கல் பணிகளையும் வழங்குவதன் மூலம் ஏற்றுமதி விவசாய திணைக்களம் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடனான இரண்டாவது பல்லாண்டுப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்ட மானது நாற்று மேடை அபிவிருத்தி, கள அபிவிருத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் பதனிடல் என்பனவற்றுக்காக நடுத்தரகால, நீண்டகால கடன்களை வழங்குவதன் மூலம் இத்துறைக்கு தொடர்ந்தும் உதவி வழங்கியது.

இவ்வாண்டில் மரமுந்திரிகை உற்பத்தி 33 சதவீதத்தினால் அதிகரித்தது. இது, பயிரிடப்படும் பரப்பினை அதிகரிப்பதற்காக உதவிக் கொடுப்பனவுத் திட்டங்களையும் விரிவாக்கப் பணிகளையும் வழங்குவதன் மூலம் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாகும். இதன் விளைவாக பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பு 1996ஆம் ஆண்டிலிருந்து உறுதியாக அதிகரித்து 2001ஆம் ஆண்டில் ஏறத்தாழ 33,000 எக்டேயர்களை எய்தியது. தனியார் துறையினரே முழுமையான மரமுந்திரிகை உற்பத்திக்கும் (97 சதவீதம்) வகை கூறினர். எந்திரத்தினால் செயற்படுத்தப்படும் மரமுந்திரிகை மேற்தோல் அகற்றும் பொறியின் அறிமுகப்படுத்தலானது மரமுந்திரிகை பதனிடும் நடவடிக்கைகளை மேம்படுத்தியது. உள்ளீடுகளைப் பதனிடுவதற்கு மேலதிகமாக மரமுந்திரிகைப் பழத்திலிருந்து தயாரிக்கப்பட்ட வைன் மற்றும் சாறு என்பனவும் சந்தையில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. மரமுந்திரிகைப் பருப்பின் ஏற்றுமதிகள் இவ்வாண்டில் 83 சதவீதத்தினால் அதிகரித்தன.

சுயதொழில் ஒன்றாக சிறு அளவில் பயிரிடுவோர் மற்றும் பாரிய அளவிலான ஏற்றுமதி சார்ந்த தொழில் முயற்சிகள் என்பனவற்றுக் கிடையில் மலர்ச் செடிகளும் வெட்டப்பட்ட பூக்களும் பிரபல்யம் பெற்று வருகின்றன. பேராதனை தாவரவியல் பூந்தோட்டத்தின் ஊடாக விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உதவிகளும் மலர்ச் செடிகளினதும் வெட்டப்பட்ட பூக்களினதும் கைத்தொழிலின் விரிவாக்கத்துக்கு உதவின. மலர்ச் செடிகள் வேருடனான வெட்டுதல் மற்றும் வெட்டிய பூக்கள் என்பனவற்றின் உற்பத்தி 2001ஆம் ஆண்டில் அதிகரித்தது. இதன் விளைவாக இவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் 16 சதவீதத்தினால் ரூ.723 மில்லியனுக்கு அதிகரித்தன.

கடந்த ஆண்டுக் காலத்தில் பெருந்தோட்டக் கம்பனிகளிடையே பிரபல்யம் பெற்றுவரும் பயிர்களில் ஒன்று எண்ணெய்த் தாவரமாகும். மூன்று தசாப்தங்களுக்கு முன்பாக இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட எண்ணெய்த்தாவரம் முக்கியமாக தென்மாகாணத்தில் வளர்கிறது. தற்பொழுது எண்ணெய்த் தாவரத்தின் கீழ் உள்ள நிலப்பரப்பு ஏறத்தாழ 2050 எக்டேயர்களாகும். இதில் அரைப்பங்கிற்கும் கூடுதலானவை நாகியதெனியா பெருந்தோட்டத்தில் உள்ளது. (1095 எக்டேயர்) பல பெருந்தோட்டக் கம்பனிகள் தம் இறப்பர் நிலங்களை எண்ணெய்த் தாவரத்திற்கு மாற்றுவதற்கு திட்டமிட்டு வருகின்றன. குறிப்பிடத்தக்கதொரு காலப்பகுதியில் இறப்பருக்கு நிலவிவரும் மோசமான விலைகளின் காரணமாக ஏற்பட்ட இழப்புக்களின் பின்னணியில் பெருந்தோட்டக் கம்பனிகளிடையே இது பிரபல்யமான பயிராக மாறிவருகின்றது. எண்ணெய்த் தாவரம் கொண்டுள்ள இன்னொரு அனுகூலம் யாதெனில் இறப்பரைக் காட்டிலும் குறைந்த தொழிலாளர் பயன்பாட்டினையும், குறுங்காலத்தில் பயனளிக்கும்

காலத்தினையும் கொண்டிருப்பதாகும். எனினும் இறப்பருடன் ஒப்பிடுகையில் இம் மரத்துண்டு பலகைத் தேவைகளுக்கோ அல்லது எரிபொருளாகவோ பயன்படக்கூடிய பெறுமதியைக் கொண்டிராமை இதன் பிரதிகூலமாகவுள்ளது. இது எவ்வித உற்பத்திக்கும் பயன்படாமையினால் பிடுங்கி அகற்றப்படும் இம்மரம் சுற்றாடல் பிரச்சனைகளுக்கு காரணமாகின்றது. தெங்கினைப் போலன்றி, எண்ணெய்த் தாவரத்தின் ஓலை எவ்வித உற்பத்திக்கும் பயன்படுவதில்லை. இறப்பருக்குப் பதிலாக பாரிய அளவில் எண்ணெய்த் தாவரத்தை பயிரிடுவது மிகக் கவனமாக பரிசீலனைகளின் பின்பு நீண்டகால பாதிப்புக்களையும் கவனத்திற் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும்.

வனிலா, காளான் மற்றும் மூலிகை உற்பத்திகள் போன்ற மருத்துவ பெறுமதிகள் கொண்ட ஏற்றுமதிப் பயிர்களுக்கு பன்முகப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. புதிய வேளாண்மை உற்பத்திகளுக்கு உற்பத்திகளைப் பன்முகப்படுத்துவதற்கும் பெறுமதி கூட்டல்களை அதிகரிப்பதற்கும் ஆராய்ச்சி வசதிகளையும் விரிவாக்கற் பணிகளையும் வழங்குவது இன்றியமையாததாகும்.

## 3.4 உள்நாட்டு வேளாண்மை


### நெல்

2001 பயிர்ச்செய்கை ஆண்டில் நெல் உற்பத்தி 2.69 மில்லியன் மெற்றிக் தொன்களாக (129 மில்லியன் புசல்) விளங்கி 5.8 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும்போக காலத்தில் ஏற்பட்ட 9.4 சதவீத வீழ்ச்சிக்கு மட்டுப்படுப்படுத்தப் பட்டிருந்த வேளையில் சிறுபோகம் சிறிதளவு அதிகரிப்பினை அறிவித்தது. இரு பருவ காலங்களிலும் விதைக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு, இவ்வாண்டில் நிலவிய மோசமான வானிலை நிலமைகளினால் வீழ்ச்சியடைந்தது. இரு பருவ காலங்களிலும் விளைச்சல் மட்டம் மேம்பட்டதுடன் இதற்கு முன்னில்லாத அளவிற்கு சிறந்த ஆண்டுச் சராசரி விளைச்சல் மட்டத்தினை அடையும் விதத்தில் சாதகமாகப் பங்களித்தது. தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக ஆண்டுச் சராசரி விளைச்சல் மேம்பட்டதுடன் எக்டேயரொன்றிற்கு பெரும்பாலும் 4 மெற்றிக் தொன் கொண்ட புதிய சாதனையொன்றையும் நிலைநாட்டியது. பெரும்போகத்திலும் சிறுபோகத்திலும் சராசரி விளைச்சல் முறையே 2 சதவீதத்தினாலும், 4 சதவீதத்தினாலும் அதிகரித்து 2000ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட முன்னைய சிறந்த மட்டத்தினை மேம்படுத்தியது. சிறுபோகத்தின் போது சராசரி விளைச்சல் எக்டேயரொன்றிற்கு 4.1 மெற்றிக் தொன்களை அடைந்தது. விளைச்சல் மட்டத்தில் ஏற்பட்ட மேம்பாட்டிற்கு வேளாண்மைத் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்ட தொழில்நுட்ப பொதியினைப் பின்பற்றியதுடன் சிறந்த தர விதை நெல் பயன்படுத்தப்பட்டமையும் காரணங்களாகும். இரு பருவ காலங்களிலும் நீர்ப்பற்றாக்குறையின் காரணமாக பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட குறைப்பும் எல்லை நிலங்களின் பயிர்ச்செய்கையை ஒழித்து விட்டமையானது விளைச்சல் மேம்படுத்துவதற்கு சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

பெரும்போக காலத்தில் வெளியீடு வீழ்ச்சியடைந்தமைக்கு விதைக்கப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட 12.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட 10.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுமே முக்கிய காரணங்களாகும். நான்கு மாவட்டங்கள் தவிர, பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட மொத்தப்பரப்பு முன்னைய ஆண்டின் பெரும்போகத்தினை விட குறைவாக இருந்தது. முக்கியமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக குருநாகல், அநுராதபுரம், அம்பாந்தோட்டை மற்றும் உடவளவைப் பிரதேசங்கள் காணப்பட்டன. இவை முறையே 33 சதவீத, 24 சதவீத, 50 சதவீத மற்றும் 94 சதவீத வீழ்ச்சிகளைக் கொண்டிருந்தன. முன்னைய ஆண்டினைப் போன்றே, ஐந்து முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங்களான குருநாகல், பொலனறுவை, அம்பாறை, அநுராதபுரம் மற்றும் மகாவலி "எச்" பிரதேசம் என்பன ஒன்று சேர்ந்து பெரும்போக உற்பத்தியில் 53 சதவீதத்திற்கு வகைகூறின.

சிறுபோகத்தில் விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பில் 3 சதவீத வீழ்ச்சி காணப்பட்டபோதும் நெல் உற்பத்தி சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியமைக்கு சராசரி விளைச்சல் மட்டத்தில் 4 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டமையே உண்மையான காரணமாகும். சிறுபோகத்தின் வெளியீடு பொலனறுவையிலும், குருநாகலிலும் முறையே 8 சதவீதத்தினாலும், 48

**வரைபடம் 3.4**
**நெல் உற்பத்தி**



**அட்டவணை 3.6**
**நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 2000 (அ) | | | 2001 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 549 | 329 | 878 | 479 | 319 | 798 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 526 | 306 | 832 | 471 | 294 | 765 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு | '000 எக்டேயர்கள் | 469 | 273 | 742 | 418 | 264 | 682 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 1,781 | 1,078 | 2,860 | 1,613 | 1,082 | 2,695 |
| | '000 புசல்கள் | 85,374 | 51,668 | 137,042 | 77,287 | 51,821 | 129,108 |
| விளைச்சல் (இ) | கி.கி. எக்டேயர்கள் | 3,798 | 3,957 | 3,856 | 3,860 | 4,102 | 3,954 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில்லியன் | 256 | 118 | 374 | 251 | 170 | 421 |
| அரிசி இறக்குமதிகள் | ('000 மெ.தொன்கள்) | - | - | 15 | - | - | 52 |
| (நெலலிற்குச் சமன்) | | | | 22 | - | - | 76 |

மூலங்கள்: வேளாண்மைத் திணைக்களம்.
வேளாண்மை, காணிகள், அமைச்சு.
தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதேவேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணக்கிடப்படுகின்றது.

சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டையின் உற்பத்தி முறையே 9 சதவீதத்தினாலும், 48 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அம்பாறை, பொலனறுவை, குருநாகல் ஆகிய மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து சிறுபோக உற்பத்தியில் பெரும்பாலும் அரைப்பங்கிற்கு (49 சதவீதம்) வகைகூறின. அம்பாறை மிக உயர்ந்த சிறுபோக உற்பத்தியைப் பதிவு செய்ததுடன் இப் போகத்தின் மொத்த உற்பத்தியில் ஐந்திலொரு பங்கிற்கும் வகைகூறியது.

நெல் நிலங்களில் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்காக வேளாண்மைத் திணைக்களத்தின் விரிவாக்கல் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு 'யாயா' செய்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டம் தொடர்ச்சியாக ஆறாவதாண்டாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் 51,000இற்கு மேற்பட்ட எக்டேயர்களை உள்ளடக்கி நாடு முழுவதிலும் 3000 செய்முறை விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் மூலம் 70,000 வேளாண்மையாளர்கள் நன்மைகளைப் பெற்றனர். செய்முறை விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட வலயங்களில் பெறப்பட்ட விளைச்சல் மற்றைய வலயங்களில் பெறப்பட்ட விளைச்சலை விட உயர்வாக இருந்தமையை வேளாண்மைத் திணைக்களம் எடுத்துக் காட்டியதுடன் இந் நிகழ்ச்சித் திட்டம் தேசிய சராசரி விளைச்சல் மட்டத்தினை மேம்படுத்துவதற்கு சாதகமான முறையில் பங்களித்தது.

நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி அரிசி இறக்குமதியின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன் இணைந்து வேளாண்மையாளர்கள் தமது நெல்லை இலாபகரமான விலையில் விற்பனை செய்வதற்கு உதவியது. 2000/ 2001 பெரும்போகத்தின் பின் கூ.மொ.விற்பனை நிலயமும் கூட்டுறவுச் சங்கங்களும் முறையே 41,000 மற்றும் 13,000 மெற்றிக் தொன்களைக் கொள்வனவு செய்தன. இவ்வாண்டில் நெல்லின் சராசரி பண்ணை விலை புசலொன்றிற்கு ரூ.12.46 ஆக இருந்தது.

2000 யூலையில் விதிக்கப்பட்ட அரிசி இறக்குமதி மீதான உரிமத் தேவைப்பாடு 2001 நவெம்பர் 22ஆம் நாள்வரை தொடர்ந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக அரிசியின் உள்நாட்டு விலைகள் அதிகரித்தமையின் பின்னணியில் அரசாங்கம் மீண்டுமொரு முறை சந்தையில் தலையிட்டு தனியார்துறையும் கூ.மொ.விற்பனை நிலையமும் 60,000 மெற்றிக் தொன் நெல்லை தீர்வையின்றி இறக்குமதி செய்ய அனுமதித்தது. மொத்த அளவில் கூ.மொ.விற்பனை நிலையம் 30,000 மெற்றிக் தொன்னை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட வேளையில் 15 தனியார்துறை இறக்குமதியாளரிடையே சமமாகப் பங்கிடப்பட்டது. தீர்வையற்ற இறக்குமதிகள் 2001 திசெம்பர் 10 வரை அனுமதிக்கப்பட்டது. 2001 திசெம்பர் 10 இலிருந்து திசெம்பர் 31ஆம் திகதிவரை செய்யப்படும் எந்த ஒரு இறக்குமதி மீதும் பிரயோகிக்கத்தக்க தீர்வை வழமையான வீதத்தில் 50 சதவீதமாக இருந்தது. வேளாண்மை அமைச்சின்படி, தனியார்துறை இறக்குமதியாளர்கள் திசெம்பர் 10ஆம் நாளுக்கு முன் அனுமதிப்பங்கான 30,000 மெற்றிக் தொன்களையும் இறக்குமதி செய்து தீர்வையற்ற இறக்குமதிக்கு தகைமை பெற்ற வேளையில் கூ.மொ.விற்பனை நிலையம் அதற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ஒரு பகுதியை மட்டுமே திசெம்பர் 10இற்கு முன்னர் இறக்குமதி செய்யக்கூடியதாக இருந்தது. இவ்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட

அரிசியின் மொத்த அளவு 51,900 மெற்றிக் தொன்களாக இருந்தது.

## ஏனைய களப் பயிர்கள்

வடகீழ் பருவக்காற்று, தென்மேல் பருவக்காற்று இரண்டும் பொய்த்தமையின் காரணமாக 2001 பயிர்ச்செய்கை ஆண்டில் ஏனைய களப் பயிர்கள் துறையின் செயலாற்றம் மோசமாக இருந்தது. மேலும், இப் பயிர்களில் பெரும்பாலானவற்றின் பயிர்ச்செய்கையானது ஒப்பீட்டு ரீதியில் மலிவாகவுள்ள இறக்குமதிகளின் கடுமையான போட்டியினை எதிர்நோக்குவதனால் வீழ்ச்சியடைந்து வருவதுபோல் தோன்றுகின்றது. பொதுவாக இப் பயிர்களில் பெரும்பாலானவற்றின் உற்பத்தி, கடந்த சில ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினையே காட்டி வருகின்றது. இதன் விளைவாக, நுகர்வோர் கேள்வியை திருப்தி செய்வதற்கு நாம் மேலும் மேலும் இறக்குமதிகளின் மீதே படிப்படியாகத் தங்கியிருந்து வருகிறோம். 2001இல் உருளைக்கிழங்கு தவிர்ந்த மற்றைய அனைத்துப் பயிர்களினதும் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. 2000ஆம் ஆண்டினைப் போன்றே உருளைக்கிழங்கின் உற்பத்தி 19 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட தீர்வை மூலம் உருளைக்கிழங்கு பயிர்செய்வோருக்கு வழங்கப்பட்ட மிகக்கூடியளவு பாதுகாப்பே காரணமாகும். வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதேபோன்று விளைச்சல் மட்டத்தில் ஏற்பட்ட மேம்பாடுமே காரணங்களாகும். உருளைக்கிழங்கு விளைச்சல் தொடர்ந்து நான்காவதாண்டாக ஏறத்தாழ 2 சதவீதத்தினால் எக்டேயரொன்றிற்கு 13.5 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்ததெனினும் மற்றைய நாடுகளிலும் பார்க்க விளைச்சல் இன்னமும் கீழேயே காணப்படுகின்றது.

1993ஆம் ஆண்டிலிருந்து வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் கொண்டுள்ள மிளகாய் உற்பத்தி 2001இல் 12 சதவீதத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தது. பெரும்போகம், சிறுபோகம் இரண்டிலும் விளைச்சலில் சிறிதளவு மேம்பாடு காணப்பட்டபோதும் இவ்விரு போகங்களிலும் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு குறைவடைந்தமையே ஒரே காரணமாகும். விளைச்சலை அதிகரிக்கும் நோக்குடன் வேளாண்மைத் திணைக்களம் பல செய்முறை விளக்கங்களையும், களநாட்களையும் நடத்தியது. செய்முறை விளக்கத்தில் பெறப்பட்ட சராசரி மிளகாய் விளைச்சல் தேசிய சராசரி மிளகாய் விளைச்சல் தேசிய சராசரியிலும் பார்க்க 50 சதவீதம் கூடுதலாகக் காணப்பட்டது. விதந்துரைக்கப்பட்ட பயிர்ச்செய்கை முறைகளைப் பிரயோகித்ததன் காரணமாக வேளாண்மையாளர்கள் தமது வருமானத்தினைக் கணிசமாக உயர்த்தக் கூடியவர்களாக இருந்தனர்.

2001இல் பெரிய வெங்காயம், சின்னவெங்காயம் இரண்டினதும் உற்பத்தி முறையே 9 சதவீதத்தினாலும், 15 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. பயிர் செய்யப்படும் நிலப்பரப்பு குறைவடைந்தமை அதேபோன்று விளைச்சல் மட்டத்தில் ஏற்பட்ட குறைப்பு என்பன சின்ன வெங்காயத்தின் குறைந்த உற்பத்திக்கும் பொறுப்பாயிருந்தன. பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பில் சிறிதளவு அதிகரிப்பு காணப்பட்டபோதும் பெரிய வெங்காயத்தின் வெளியீடு வீழ்ச்சியடைந்தமைக்கு விளைச்சல் குறைவடைந்தமையே காரணமாகும்.

1998இலிருந்து வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை கொண்டிருந்த பயறு, உழுந்து மற்றும் தட்டைப்பயறு போன்ற அவரை வகைப் பயிர்களின் உற்பத்திகள் மேலும் முறையே 16 சதவீதத்தினாலும், 5 சதவீதத்தினாலும், 17 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. பயிரிடப்பட்ட பரப்பு, விளைச்சல் மட்டம் ஆகிய இரண்டும் 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மூன்று பயிர்களிலும் குறைவாகவே காணப்பட்டது. சோளம் மற்றும் எள் என்பனவற்றின் உற்பத்தியும் 1998 இலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சோளம், எள்ளு என்பனவற்றின் உற்பத்தி முறையே 7 சதவீதத்தினாலும், 11 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

கூ.மொ.விற்பனை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட பயறின் உள்ளூர் கொள்வனவு 229 மெற்றிக் தொன்களுக்கு இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது. கூ.மொ.விற்பனை நிலையத்தின் செத்தல் மிளகாய், உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் கொள்வனவுகள் முறையே 90 சதவீதத்தினாலும், 87 சதவீதத்தினாலும், 47 சதவீதத்தினாலும் கடுமையாக வீழ்ச்சியடைந்து வேளாண்மையாளர்கள் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் பெரும் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியமையை எடுத்துக்காட்டியது.

மேலே குறிப்பிடப்பட்டவாறு, உருளைக்கிழங்கின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் பின்னணியில், இறக்குமதி உருளைக்கிழங்கின் நுகர்வு ஏறத்தாழ 62,550 மெற்றிக் தொன்களுக்கு 46 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், பயிர்ச்செய்கைக்கான சிறந்த தரவிதை உருளைக்கிழங்கிற்கான அதிகரித்த கேள்வியின் காரணமாக விதை உருளைக்கிழங்கின் இறக்குமதிகள் 6725 மெற்றிக் தொன்களுக்கு இருமடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது.

மோசமான உள்நாட்டு உற்பத்தியின் காரணமாக மிளகாய் மற்றும் பயற்றின் இறக்குமதி முறையே 11

சதவீதத்தினாலும், 29 சதவீதத்தினாலும் அதிகரித்தன. பயறு மற்றும் மிளகாயின் மொத்த நிரம்பலில் இறக்குமதிகள் முறையே 47 சதவீதத்திற்கும், 34 சதவீதத்திற்கும் வகைகூறின. பயறு மற்றும் தட்டைப்பயறு என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இவ்வாண்டில் சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு வகைகளின் இறக்குமதி 13 சதவீதத்தினால் அதிகரிக்க காரணமாயிற்று.

## பழவகை மற்றும் காய்கறிகள்

தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, 2001இல் மொத்த காய்கறி உற்பத்திகள் 550,000 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தாழ்நில காய்கறிகளின் உற்பத்தி 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கியமான பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் இவ்வாண்டில் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகளின் காரணமாக பயிர்ச் செய்கையின் கீழான நிலப்பரப்பு குறை வடைந்தமையே காரணமாகும். மலைநாட்டுக் காய்கறிகளின் கீழான நிலப்பரப்பும் வீழ்ச்சியடைந்தமைக்கு காய்கறிகளுடன் போட்டியிட்ட உருளைக்கிழங்கின் கீழான நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பதிலாக, 2001இல் பெரும்பாலான காய்கறிகளின் விலைகள் 2000ஆம் ஆண்டினை விட உயர்வாக இருந்தன. உள்ளீடுகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதிகரித்த போக்குவரத்துச் செலவும் காய்கறிகளின் சராசரி சில்லறை விலைகள் கிலோகிறாமொன்றிற்கு ரூ.20.00இற்கும், ரூ.40.00இற்கு மிடையில் வேறுபட்ட வேளையில் மலைநாட்டுக் காய்கறிகளின் விலைகள் கி.கிறாமிற்கு ரூ.35.00 இற்கும் ரூ.70.00 இற்குமிடையில் வேறுபட்டன.

இலங்கையில் பழவர்க்கங்களின் பாரிய அளவுச் பயிர்ச்செய்கை அன்னாசி, வாழை மற்றும் ரம்புட்டான் போன்ற ஒருசில வர்க்கங்களுக்கே மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. எனினும், பல வர்க்கங்களைக் கொண்ட பழவகைகள் உள்நாட்டு நுகர்விற்காகவும் ஏற்றுமதிகளுக்காகவும் சிறிய அளவிலும் வீட்டுத்தோட்டங்களிலும் பயிரிடப்படுகின்றன. வேளாண்மைத் திணைக்களம், வேளாண்மை ஏற்றுமதித் திணைக்களம் மற்றும் நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டம் என்பன பழவகைகளின் பயிர்ச்செய்கைக்கு உதவுகின்றன. உடன் மற்றும் உலர் பழவகை ஏற்றுமதிகளின் அளவு 7,399 மெற்றிக் தொன்களுக்கு 30 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் ஏறத்தாழ ரூ.400 மில்லியன் இதன் மூலம் பெறப்பட்டது. அதேவேளை, பதனிடப்பட்ட பழ ஏற்றுமதி அளவு 4,069 மெற்றிக் தொன்களுக்கு 44 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் ரூ.372 மில்லியன் ஏற்றுமதி வருவாய்கள் கிடைக்கப்பெற்றன.

இலங்கையிலிருந்து பரந்தரளவிலான காய்கறிகள் முக்கியமாக மத்திய கிழக்கு, மாலைதீவு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. 2001இல் மொத்த காய்கறி ஏற்றுமதிகள் 576 மெற்றிக் தொன்களுக்கு 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. சரக்கிற்கான இடவசதிகள் போதாமை கட்டுநாயக்க வானூர்தி நிலையம் தாக்கப்பட்ட பின்னர் அதிகரித்த சரக்குக் கட்டண வீதங்களும் உடன் காய்கறிகளினதும் பழவகைகளினதும் ஏற்றுமதிக் கைத்தொழிலை மோசமாகப் பாதித்தன.

உள்ளூர் பழவகைகள் மற்றும் காய்கறிகளுக்கான சிறந்த ஏற்றுமதிக் கேள்வி காணப்பட்டபோதும், தொடர்ச்சியான அடிப்படையில் பாரியளவு நிரம்பலை மேற்கொள்ள முடியாமல் இருப்பது பெரும் தடையாகவுள்ளது. ஏற்றுமதியாளர்களுடன் நேரடித் தொடர்புகளைப் பேணுதல், ஒப்பந்த பண்ணை முறைகளை மேலும் அபிவிருத்தி செய்தல் என்பன பழம் மற்றும் காய்கறி ஏற்றுமதி சந்தையை மேம்படுத்துவதற்கு முக்கியமானவையாகவுள்ளன. சிறப்பு அங்காடிகள் மற்றும் வான் பணிக் கைத்தொழிலுக்காகத் தற்பொழுது உயர் பெறுமதிகளைக் கொண்ட காய்கறிகள் பொலித்தீன் கூடாரங்களிலும் பச்சை வீடுகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் வளர்க்கப்படுகின்றன. வாழைச் செய்கை சொட்டு நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தி மகாவலி பிரதேசத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அடையாளங் காணப்பட்ட முக்கிய பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் வேளாண்மை பதனிடல் வலையங்களை நிறுவுவது வேளாண்மை பதனிடல் மற்றும் ஏற்றுமதிகளில் முதலீட்டாளர்களைக் கவருவதற்கு உதவும். பழவகை மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு வான் சரக்கு வசதிகள் கிடைக்கத்தக்கதாக இருப்பதும் முக்கியமானதாகும்.

2001ஆம் ஆண்டில் இலங்கை ரூ.1.3 மில்லியன் செலவினை ஏற்படுத்திய ஏறத்தாழ ரூ.40,000 மெற்றிக் தொன் பழவகைகளை இறக்குமதி செய்துள்ளது. முன்னைய ஆண்டினைப் போன்றே, அப்பிள், தோடம்பழம், பேரீச்சம்பழம் மற்றும் முந்திரிப்பழம் என்பன இறக்குமதி செய்யப்பட்டவற்றில் முக்கியமானவையாக இருந்தன.

## சீனி

சீனித்துறை இலங்கையில் தொடங்கிய நாற்பதாண்டு காலப்பகுதியில் எதிர்பார்த்தளவிற்கு அது செயலாற்றவே இல்லை. கடுமையான கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தினாலொழிய அண்மைய எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்றை எதிர்பார்க்கவே முடியாது. கடந்த பத்தாண்டு காலத்தில் தொழிற்படுகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை இரண்டிற்கு அரைப்பங்காகியது. அரசதுறையும்

**அட்டவணை 3.8**
**சீனி உற்பத்தி மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | செவனகல சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் (ஈ) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2000(அ) | 2001(ஆ) | 2000(அ) | 2001(ஆ) | 2000(அ) | 2001(ஆ) |
| 1.கரும்பு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (முளை தோன்றியது) (இ) | எக்டேயர்கள் | 3,540 | 3,466 | 3,497 | 4,091 | 7,037 | 7,557 |
| 2.அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு (இ) | எக்டேயர்கள் | 2,753 | 2,702 | 3,493 | 3,343 | 6,246 | 6,045 |
| 3.அறுவடை செய்யப்பட்ட கரும்பு (இ) | மெ.தொன்'000 | 286 | 236 | 183 | 132 | 469 | 368 |
| 4.தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு | மெ.தொன்'000 | 2 | 1 | 317 | 197 | 319 | 198 |
| 5.பிழியப்பட்ட கரும்பின் அளவு | மெ.தொன்'000 | 287 | 237 | 500 | 329 | 787 | 566 |
| 6.சராசரி விளைச்சல் (இ) | மெ.தொன்/எக்டேயா | 83 | 71 | 52 | 38 | 68 | 55 |
| 7.சீனி உற்பத்தி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) | மெ.தொன்'000 | 24 | 20 | 40 | 28 | 64 | 48 |
| 8.சீனி பெறப்பட்ட வீதம் (ஈ) | % | 8.44 | 8.51 | 8.01 | 8.64 | 8.13 | 8.48 |

மூலங்கள்: வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கைத்தொழில்கள்.
வரையறுக்கப்பட்ட செவனகலை சீனிக் கைத்தொழில்கள்.


(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) முதன்மைத் தோட்டங்களையும் ஒதுக்கீட்டாளர்களையும் உள்ளடக்கும்.

(ஈ) கரும்பு பெறும் வீதம் = $\frac{\text{உற்பத்தி செய்யப்பட்ட சீனி}}{\text{ஆலையிடப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$

தனியார்துறையும் பங்குகளைக் கொண்டுள்ளமையினால் கைத்தொழிலின் சொத்துடமை பற்றியும் தெளிவில்லை. நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையான ஒரு தீர்மானத்தினை மேற்கொள்வதில் ஒரு தெளிவற்ற இலக்கிற்கு இது இட்டுச் செல்லுகின்றது.

சீனி பெறும் வீதத்துடன் நேரடியாக தொடர்புபட்ட சிறந்ததர கரும்பின் வழங்கலை ஊக்குவிப்பதற்கு கரும்பின் விலையிடற் கொள்கை திருத்தியமைக்கப்பட வேண்டும். தற்பொழுது, கரும்பிற்கான கொடுப்பனவு கரும்பின் தரத்தினைக் கருத்திற் கொள்ளாது நிறையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இது உயர்ந்த சீனியை உற்பத்தி செய்யும் கரும்பிற்குப் பதிலாக உயர்ந்த கரும்பினை உற்பத்தி செய்யும் வகைகளைப் பயிரிடுவதற்கு வேளாண்மையாளர்களை ஊக்குவிக்கின்றது. இதன் விளைவாக, உயர்ந்த சீனியைத் தரும் வகைகளாக 1992இன் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தினால்

**வரைபடம் 3.5**
**மொத்தச் சீனிக் கிடைப்பனவு**




வெளியிடப்பட்ட இரண்டு வகைகள் (SL 8306 உம் SLI 121) இன்னமும் கரும்புச் செய்கையாளர்களிடையே பிரபல்யம் அடையாமல் இருந்து வருகின்றன.

வேளாண்மைத் தொழிலாளரின் பற்றாக்குறையின் பின்னணியில், பொறிமுறைப்படுத்துவதன் மூலம் சீனியின் உற்பத்திச் செலவினைக் குறைக்க முடியும். எனினும், தனியார் கரும்புத் தோட்டங்களின் சராசரி அளவு பொருளாதார ரீதியில் நன்மைகளைப் பெறக்கூடிய அளவிற்கு பொறிமுறையை ஊக்குவிப்பதாக இல்லை. சீனி பெறும் வீதமும் தொழிற்சாலைகளில் கரும்பு பிழியும் வினைத்திறனினால் பாதிக்கப்படுகின்றது. தொழிற்சாலைகள் நவீனமயப்படுத்துவதிலும் கரும்பு பிழியும் நடைமுறையின் வினைத்திறனை மேம்படுத்துவதிலும் முதலீடுகளை மேற்கொள்ளவில்லை. உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதனால் உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் இறக்குமதியிலிருந்தான போட்டியை எதிர்கொள்வதில் இடர்ப்பாடுகளை காண வேண்டியிருந்தது. இதன் காரணமாக தொழிற்சாலைகள் நிதியியல் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியமையினால் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதில் மேலும் முதலீடுகளை மேற்கொள்ளத் தயங்கின.

கரும்பின் உற்பத்தியிலும் சீனி உற்பத்தியிலும் கடந்த அண்மைக் காலங்களில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும்போக்கு 2001இலும் தொடர்ந்தது. 2001இல் 48,000 மெற்றிக் தொன்களாகக் காணப்பட்ட சீனி உற்பத்தி முன்னைய ஆண்டின் உற்பத்தியிலும் பார்க்க 25 சதவீதம் குறைவானதாகும். 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் செவனகல மற்றும் பெல்வத்தை இரண்டினதும் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

2000ஆம் ஆண்டில் கரும்பு வளரும் பிரதேசங்களில் நிலவிய கடுமையான வரட்சி நிலைமைகள் கரும்பின் கிடைப்பனவைக் கடுமையாகப் பாதித்தன. மேலும் அறுவடைக் காலம் தொடங்குவதற்கு தாமதமாகியமையினால் பெல்வத்தை பாதிக்கப்பட்டது. அதேவேளை செவனகல வரட்சிக்குப் புறம்பாக, கரும்புத் தோட்டத்தின் ஒரு பகுதியில் தீ பற்றிக் கொண்டமையினால் பிழிவதற்கான கரும்பின் கிடைப்பனவு குறைவடைந்தது. இதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தி கேள்வியில் 10 சதவீத்திற்கும் குறைவான பங்கினை ஈடுசெய்யவே போதுமானதாக இருந்தது. இதன் விளைவாக நாடு தொடர்ந்தும் இறக்குமதியிலேயே பெருமளவிற்கு தங்கியிருக்க வேண்டியிருக்கும்.

இலங்கையின் சீனி பெறல் வீதமும் அதேபோன்று கரும்பு விளைச்சலும் அயல்நாடுகளை விட மிகக் குறைவாகவே இருக்கின்றன. சீனிக் கைத்தொழில் ஆற்றல் மிக்க நிலைமையை அடையவேண்டுமாயின் இலங்கை அதன் விளைச்சல் மட்டத்தை மேம்படுத்துவதுடன் சீனி பெறல் வீதங்களை அதிகரிக்கும் கூடியளவு சீனியைக் கொண்டுள்ள கரும்பு வகைகளையும் பயிரிட வேண்டும்.

### 3.5. மீனும் கால்நடையும்

#### மீன்

மீன்பிடி மற்றும் நீரியியல் மூலவள அமைச்சினதும், தேசிய ரீதியில் மூலவள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையினாலும் மதிப்பிடப்பட்டவாறு, மீன் உற்பத்தி 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கடல் மற்றும் பண்ணை இரண்டு துறைகளினதும் வெளியீடுகள் 5 சவீதத்தினாலும், 19 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது வெளியீட்டின் பொதுவான வீழ்ச்சிக்கு வழிவகுத்து.

கரையோரம், ஆழ்கடல் மற்றும் கரைகடந்த துறைகளை உள்ளடக்கிய கடற்றுறை மொத்த மீன் உற்பத்தியில் 89 சதவீதத்திற்கு வகைகூறியது. கடல்மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக கரையோரத் துறையில் ஏற்பட்ட 9 சதவீத வீழ்ச்சியே ஒரே காரணமாக இருந்தது. மாறாக, கரைகடந்த துறைகள் 4 சதவீதத்தினால் அதிகரித்தன.

**அட்டவணை 3.9**
**மீன் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள் '000

| துணைத்துறை | 1999 | 2000(அ) | 2001(ஆ) |
|---|---|---|---|
| கடல் (இ) | 276 | 267 | 255 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 31 | 37 | 30 |
| மொத்தம் | 307 | 304 | 285 |

மூலங்கள்: கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு. தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர்.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல்.

மொத்த உற்பத்தியில் 11 சதவீதத்திற்கு வகைகூறும் உள்நாட்டு மீன்பிடி மற்றும் பண்ணைத்துறையின் வெளியீடும் வீழ்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் மீன்குஞ்சுகளின் இருப்பு குறைவடைந்தமையும் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டமையுமே முக்கிய காரணமாகும்.

உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி அதேபோன்று இறக்குமதியில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றின் காரணமாக, இவ்வாண்டில் மீன் விலைகள் அதிகரித்தன. கொழும்பு மொத்த விற்பனை மீன் சந்தையில் அனைத்து வகை மீன் வகைகளினதும் விலைகள் 2 சதவீதத்திலிருந்து 43 சதவீதம் வரை அதிகரித்தன. அதேவேளை கொழும்பு பிரதேசத்தில் சில்லறை விலைகள் 6 சதவீதத்திலிருந்து 18 சதவீதம் வரையிலான அதிகரிப்பினைக் கொண்டிருந்தன.

இவ்வாண்டில், தீர்க்கப்படாத பாதுகாப்பு நிலைமையின் காரணமாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆழ் கடல் மீன்பிடியை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கம் 2001இல் உதவுதொகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 7 பலநாள் படகுகளையும் 783 வழமையான கலம்களையும் 269 தொகுதி மீன்பிடிக் கருவிகளையும் வழங்கியது.

உடன் மீன், உப்பிடப்பட்ட மீன் மற்றும் நண்டு இறால் வகைகளின் மொத்த ஏற்றுமதி அளவு 15,572 மெற்றிக் தொன்களுக்கு 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தகரத்திலடைக்கப்பட்ட மீன், உப்பிடப்பட்ட மீன் மற்றும் ஏனைய வடிவங்களிலான மீன் இறக்குமதிகளும் அளவு நியதிகளில் 71,586 மெற்றிக் தொன்களுக்கு 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், இறக்குமதிகளின் பெறுமதி ரூ.5,767 மில்லியனுக்கு 15 சதவீதத்தினால் அதிகரித்தன.

2001இல் அலங்கார மீன் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ.545 மில்லியனுக்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அலங்கார மீன் வர்க்கத்தில் இலங்கைக்குப் பெரும் போட்டியாக இருந்துவரும் சிங்கப்பூர் அண்மையில் அதன் சந்தைப்படுத்தல் முறைகளைக் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்படுத்தியுள்ளது. இலங்கை அதன் ஏற்றுமதிச் சந்தை பங்குகளை அதிகரிக்கும் பொருட்டு அலங்கார மீனினைக் கையாள்வதிலும் பொதியிடுவதிலும் மேம்பாட்டினை மேற்கொள்ளும் தேவை அதற்கு காணப்படுகின்றது.

### கால்நடை

பாற்பண்ணை மற்றும் கோழி வளர்ப்புத் துணைத் துறைகளை கால்நடை துறை உள்ளடக்கியுள்ளது. பாற்பண்ணைத் துறையில், 2001இல் பசுப்பால் மற்றும் எருமைப் பால் உற்பத்திகள் முறையே 266 மில்லியன் இலீற்றர்களுக்கும், 83 மில்லியன் இலீற்றர்களுக்கும் சிறிதளவில் அதிகரித்தன. வரையறுக்கப்பட்ட மில்கோ பிறைவேட், வரையறுக்கப்பட்ட நெஸ்லே லங்கா, வரையறுக்கப்பட்ட இன்ரனசனல் டெய்றி புரடக்ஸ் ஆகிய முக்கிய கம்பனிகளினதும் மற்றும் பதனிடலாளர்களினதும் பால் சேகரிப்பு 102 மில்லியன் இலீற்றர்களாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. மில்கோவினதும் வரையறுக்கப்பட்ட இன்ரனசனல் டெய்றி புரடக்ஸினதும் பால் சேகரிப்பு முறையே 16 சதவீதத்தினாலும், 42 சதவீதத்தினாலும் அதிகரித்தது. இன்ரனசனல் டெய்றி புரடக்ஸ்சின் பால் சேகரிப்பு அதிகரித்தமைக்கு உற்பத்தியாளர் விலைகளில் ஏற்பட்ட மேம்பாடும் உள்ளடக்கும் பிரதேசம் பொலனறுவையைச் சுற்றி விரிவடைந்தமையுமே காரணங்களாகும். உற்பத்தியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட விலைகள் 2001 ஏப்பிறல் 16ஆம் நாள் தொடக்கம் லீற்றருக்கு ரூ.14.17 இலிருந்து ரூ.14.81 இற்கு அதிகரிக்கப்பட்டது.

சேகரிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இணையாக, பார்ச்சர் முறைப்பால், கிருமி நீக்கப்பட்ட பால், பால்மா மற்றும் யோர்க்கட் ஆகிய மில்கோவின் முக்கிய உற்பத்திகள் முறையே 6 சதவீதத்தினாலும், 9 சதவீதத்தினாலும், 15 சதவீதத்தினாலும், 10 சதவீதத்தினாலும் அதிகரித்தன. வரையறுக்கப்பட்ட நெஸ்லே லங்காவின் பால் உற்பத்திகளின் மொத்த வெளியீடு 39 சதவீதத்தினால் 12,014 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தவேளையில் வரையறுக்கப்பட்ட இன்ரனசனல் டெய்றி புரடக்ஸ் உற்பத்தியும் 2001இல் 6,703 மெற்றிக் தொன்களுக்கு உயர்ந்து 7 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

இவ்வாண்டில் பால் மற்றும் பாலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் இறக்குமதிகள் 55,471 மெற்றிக் தொன்களுக்கு 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இறக்குமதிகளின் பெறுமதி ரூ.10,912 மில்லியன்களாகும்.

வேளாண்மை மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் மதிப்பீடுகளின்படி இவ்வாண்டில் தேசிய முட்டை உற்பத்தி 966 மில்லியன் முட்டைகளுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்தது. கோழிக்குஞ்சு உற்பத்தி 6 மில்லியன் கோழிக்குஞ்சு 22 சதவீதத்தினால் அதிகரித்தன. கோழித்தீனின் உயர்ந்த செலவு மந்தமடைந்த முட்டை விலைகள் என்பன சிறிய அளவு கோழிப்பண்ணைகளை ஆற்றல் குன்றிய தொழில் முயற்சிகளாக்கியுள்ளன.

கோழி இறைச்சி உற்பத்தி 2001இல் 70,000 மெற்றிக் தொன்களுக்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தன. தீவு முழுவதற்குமான கோழி வளர்ப்போர் சங்கத்தின்படி அடைகாக்கும் பொறிச் சொந்தக்காரர்களிடையே தொடர்பூட்டல் போதாமையால் கேள்வி குறைவாக இருந்தபோதும் ஒரு நாள் கோழிக்குஞ்சின் உற்பத்தி அதிகரித்தது. வலு வழங்கல்களில் அடிக்கடி ஏற்பட்ட தடங்கல்கள் சுற்றுலாக் கைத்தொழில் எதிர்நோக்கிய பின்னடைவு என்பனவற்றின் காரணமாக சிறியஅளவு கோழிப்பண்ணைச் சொந்தக்காரர்கள் சந்தைப படுத்தலில் பிரச்சனைகளை எதிர்கொண்டனர்.


## 3.6 உள்ளீடுகள்

### வளமாக்கி

மோசமான வானிலை நிலமைகளின் விளைவாக அனைத்து முக்கிய பெருந்தோட்டப் பயிர்களினதும் களப்பயிர்களினதும் வளமாக்கிப் பாவனை வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக வளமாக்கி வழங்கல்கள் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், நெல்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் கலண்டர் ஆண்டு அடிப்படையில் 2001இல் 6.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, 2001இன் இறுதிப்பகுதியில் தொடங்கிய 2001/ 2002 பெரும்போகத்தில் நெல்லின் கீழ் பயிர் செய்யப்பட்ட பரப்பு அதிகரித்தமையே காரணமாகும்.

யூரியாவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த வளமாக்கி உதவு தொகைத் திட்டம் 2001இல் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது. யூரியா 50 கி.கிறாம் பை ஒன்று ரூ.350 இற்கு வேளாண்மையாளர்களுக்கு விற்கப்பட்டது. 2001ஆம் ஆண்டில், யூரியாவின் பன்னாட்டு விலையில் ஏற்பட்ட மாற்றல்கள் மற்றும் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட தளம்பல்கள் ஆகிய இரண்டுடனும் இணைந்து

வரைபடம் 3.6
வளமாக்கிப் பயன்பாடு - முக்கிய பயிர்வகைகள்
( 1990=100 )



**அட்டவணை 3.10**
**பயிர்களின் படியான வளமாக்கிப் பயன்பாடு**

'000 மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1999 | 2000 (அ) | 2001 (ஆ) |
|---|---|---|---|
| நெல் | 321 | 262 | 279 |
| தேயிலை | 164 | 200 | 187 |
| இறப்பர் | 10 | 14 | 9 |
| தெங்கு | 39 | 34 | 30 |
| ஏனைய களப் பயிர்கள் | 43 | 40 | 30 |
| ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் | 10 | 9 | 9 |
| ஏனையவை | 30 | 34 | 36 |
| மொத்தம் | 617 | 593 | 580 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது. மூலம்: தேசிய வளமாக்கிச் செயலகம்.
(ஆ) தற்காலிகமானவை.

செல்லும் விதத்தில் உயர்த்தப்பட்டன. சனவரி தொடக்கத்தில் மெற்றிக் தொன்களிற்கான உதவுதொகை வீதம் ரூ.8,642 ஆக இருந்ததுடன் சனவரி இறுதியில் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களையும் ரூபாத் தேய்மானத்தினையும் உள்ளடக்கும் விதத்தில் படிப்படியாக அதிகரித்து மெற்றிக் தொன்னொன்றிற்கு ரூ.15,060 என்ற உச்சமட்டத்தினை அடைந்தது. எனினும், இவ்வீதம் உலகச்சந்தை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் ரூபா படிப்படியாக உறுதியடைந்தமை என்பனவற்றின் காரணமாக படிப்படியாகக் குறைவடைந்தது. 2001 இறுதியில், உதவுத்தொகை வீதம் மெற்றிக் தொன்னுக்கு ரூ.12,400 ஆக இருந்தது. இவ் உதவுத்தொகை வீதம் 2000ஆம் ஆண்டில் நிலவிய வீதங்களை விட கணிசமானளவு உயர்வானதாகும். 2001 இறுதியில் மொத்த உதவுதொகைக் கொடுப்பனவுகள் ரூ.3,649 மில்லியனாக அமைந்ததுடன் இது, 2000ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட ரூ.749 மில்லியன் மீதியையும் உள்ளடக்கியிருந்தது. உதவு தொகைத் திட்டத்திலன கீழ் 2001ஆம் ஆண்டில் 241,754 மெற்றிக் தொன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டது.

பன்னாட்டு விலைகள் மிக உயர்ந்த மட்டத்தில் இருந்த வேளையிலேயே பெருமளவு யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளமையை 2001ஆம் ஆண்டின் யூரியா இறக்குமதி எடுத்துக்காட்டியது. உதவுதொகைக் கொடுப்பனவுகள் இறக்குமதி விலைகளின் அடிப்படையில் கணிக்கப்படுவதனால் பன்னாட்டு விலைகள் குறைந்த மட்டத்தில் காணப்படும்போது யூரியாவை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி யாளர்களுக்கு ஊக்குவிப்புக்கள் எதுவுமிருக்கவில்லை. உதவுதொகைக் கொடுப்பனவுகளைக் கணிக்கும் தற்போதைய முறை தார்மீக ஆபத்துக்களுக்கும் பல்வேறு பிழையான நடைமுறைப் பிரச்சனைகளுக்கும் வழிவகுக்கக்கூடும். எனவே உதவு தொகைத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு கூடியளவிற்கு ஒழுங்கான அமைப்பொன்றிற்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். இது இறக்குமதியாளர்கள் பன்னாட்டு விலைகள் குறைவாக உள்ள வேளைகளில் யூரியாவை இறக்குமதி செய்ய ஊக்குவிக்கும்.

## விதைகள்

அரச மற்றும் தனியார் துறை தொழில்முயற்சிகள் 11,300 மெற்றிக் தொன் சான்றுபடுத்தப்பட்ட விதை நெல்லை உற்பத்தி செய்தனர். இது நாட்டின் தேவையில் 13 சதவீதத்தினை மட்டும் கொண்டிருந்தது. மீதி விதை நெல் தேவை, வேளாண்மையாளர் தமது முன்னைய போகத்திலிருந்து பெற்ற தமது சொந்த விதைகளிலிருந்து ஈடுசெய்யப்பட்டது. வேளாண்மைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விதைநெல்லின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3,090 மெற்றிக் தொன்களுக்கு 45 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார்துறை மற்றும் அரச விதைப் பண்ணைகளுக்குப் புறம்பாக மாகாணசபைகள், மகாவலி மேலாண்மைச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களும் விதைநெல் உற்பத்தியை தொடர்ந்தும் மேற்கொண்டன.

தனியார் விதைநெல் உற்பத்தியாளர்கள் உற்பத்திச் செலவிற்குக் குறைவாக விதைநெல்லை விற்பனை செய்யக்கூடாதென அரசிற்கு விடுத்த வேண்டுகோளுக்கு செவிசாய்க்கும் விதத்தில் வேளாண்மைத் திணைக்களத்தினால் விற்பனை செய்யப்படும் சான்றுபடுத்தப்பட்ட விதைநெல்லின் விலை இவ்வாண்டில் 10 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டது. 1997இல் பின்னர் செய்யப்பட்ட முதலாவது விலைத்திருத்தம் இதுவாகும்.

வேளாண்மைத் திணைக்களம், சான்று படுத்தப்பட்ட காய்கறி விதைகளின் உற்பத்திக்காக தனியார்துறைக்கு அடிப்படை காய்கறி விதைகளைத் தொடர்ந்தும் வழங்கியது. தாழ்நில காய்கறிகளின் விதைகள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட வேளையில் பிறநாட்டு காய்கறிகளுக்குரிய விதைகளில் பெரும்பாலானவை இறக்குமதி செய்யப்பட்டன. 2001இல் காய்கறி விலைகளின் இறக்குமதி 223 ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கு 19 சதவீதத்தினால் உயர்வடைந்து ரூ.136 மில்லியனாக விளங்கின. 2001இல் வேளாண்மைத் திணைக்களமும் சான்றுப்படுத்தப்பட்ட விதை உருளைக்கிழங்கினை தொடர்ந்தும் வழங்கியது. விதை உருளைக்கிழங்கிற்கான உயர்ந்த கேள்வியினை ஈடுசெய்யும் பொருட்டு விதை உருளைக்கிழங்கின் இறக்குமதிகள் 2001இல் ஏறத்தாழ 7,000 மெற்றிக் தொன்களுக்கு இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தன.

## வேளாண்மை-இரசாயனங்கள்

கிருமித்தடுப்பு பதிவாளரின் தற்காலிக மதிப்பீடுகளின் படி, பூச்சிகொல்லிகள் களைகொல்லிகள் மற்றும் பங்கசுக்களை உள்ளடக்கிய கிருமிநாசினிகளின்

பயன்பாடு இவ்வாண்டில் 2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பூச்சிகொல்லிகளின் பயன்பாடு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மாறாக களைகொல்லிகள் மற்றும் பங்கசுக்கின் பயன்பாடு முறையே 8 சதவீதத்தினாலும், 2 சதவீதத்தினாலும் அதிகரித்தன. பூச்சி கொல்லிகளின் பயன்பாடு வீழ்ச்சியடைந்தமைக்கு, பூச்சிகொல்லிகளின் பயன்பாட்டினை ஊக்கமிழக்கச் செய்யும் வேளாண்மைத் திணைக்களத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நோய் கொல்லி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் ஊக்குவிக்கப்பட்டமையே காரணமாகும். வேளாண்மையில் காணப்படும் உயர்ந்த தொழிலாளர் செலவினைக் கருத்திற்கொள்கையில் கையினால் களைபிடுங்கல் ஒப்பீட்டுரீதியில் மிகச்செலவாக மாறியுள்ளதுடன் இதன் காரணமாக, வேளாண்மையாளர்கள் களைகளைக் கட்டுப்படுத்து வதற்கு களைகொல்லிகளைக் கூடுதலாகப் பயன்படுத்த விரும்புகின்றனர்.

### 3.7 காடாக்கல்

வன பரிபாலனத் திணைக்களம் காடாக்கல் துறை முதன்மைத் திட்டத்தினை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியதுடன் வெளிநாட்டுக் கொடை முகவர்களின் உதவியுடன் காடாக்கலுடன் தொடர்பான பல நடவடிக்கைகளுக்காக பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கி பங்கேற்பு காடாக்கல் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக ரூ.40 மில்லியனையும் மேல் நீரோட்ட முகாமைத்துவ செயற்றிட்டத்திற்காக ரூ.62 மில்லியனையும் வழங்கியது. இச் செயற்றிட்டங்களின் கீழ் தாங்கிருப்பு வலய மரநடுகை, வீட்டு மரவளர்ப்பினை அபிவிருத்தி செய்தல், எல்லைகளில் மரநடுகை, அருவி பாயுமிடங்களில் மரநடுகை, பொது இடங்களிலும் தனியார் நிலங்களிலும் மரங்களை நடுதல், விதைகளை உற்பத்தி செய்தல் மற்றும் இயற்கைக் காடுகளின் எல்லைகளை அளவீடு செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2001ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கி காட்டு மூலவள முகாமைத்துவ செயற்றிட்டம் வன பரிபாலனைத் திணைக்களத்தினை மீளவமைத்தல் மற்றும் வனக் கட்டளைச் சட்டத்தினை திருத்துதல் என்பனவற்றிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி ரூ.49 மில்லியனை வழங்கியது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அலுவலர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், விரிவாக்கல் பணிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உலக சூழல் நடவடிக்கைச் செயற்றிட்டத்திற்கு ரூ.9.2 மில்லியனை வழங்கியது. மருத்துவ மூலிகை பயிரிடல் செயற்றிட்டத்தின்கீழ் உலகவங்கி ரூ.4.3 மில்லியனை வழங்கியது. சூழல் முகாமைத்துவத்தின்கீழ் இயற்கைக் காடுகளிலுள்ள தரம் குன்றிய நிலங்கள் முன்னேற்றப்பட்டதுடன் கண்டல் காடு ஒதுக்கு பிரதேசங்களின் எல்லை வரையப்பட்டன. காட்டுப் பாதுகாப்பு தொடர்பான மேலும் பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் கிராம மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரச அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டன. சட்டத்திற்கு மாறான காடழிப்பினை குறைப்பதற்காக, வனத்திணைக்களம், மரம் தறித்தல் மற்றும் கொண்டு செல்லல் நடவடிக்கையுடன் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது.

2001ஆம் ஆண்டில் 6,577 எக்டேயர் பைன் மர வளர்ப்புத் தொடர்பாக ஆறு பிசின் எடுக்கின்ற குத்தகை உடன்படிக்கைகள் தொடர்ந்தும் நடைமுறை

**அட்டவணை 3.11**
**காடாக்கல் துறை மீதான புள்ளி விபரங்கள்**

| வியடம் | அலகு | 1999 | 2000 (அ) | 2001 (ஆ) |
|---|---|---|---|---|
| 1.மொத்தக் காட்டுத் தொகுதி உள்ளடக்கம் (இ) | '000 எக்டேயர்கள் | 2,119 | 2,119 | 2,119 |
| மூடப்பட்ட காடுகள் (ஈ) | '000 எக்டேயர்கள் | 1,583 | 1,583 | 1,583 |
| பரந்த காடுகள் | '000 எக்டேயர்கள் | 464 | 464 | 464 |
| சதுப்பு நிலக் காடுகள் | '000 எக்டேயர்கள் | 8,687 | 8,687 | 8,687 |
| 2.காடு அழிக்கப்பட்ட நிலப்பரப்பு (உ) | எக்டேயர்கள் | - | 244 | 314 |
| 3.மீள் காடாக்கப்பட்ட பரப்பு | எக்டேயர்கள் | 556 | 828 | 840 |
| 4.பதிவுசெய்யப்பட்ட காடு சார்ந்த குற்றங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 3,928 | 4,626 | 4,344 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் அளவு | கன மீற்றர்கள் | 2,912 | 5,662 | 4,201 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் பெறுமதி | மில். ரூபா | 28.7 | 56.0 | 58.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) கிட்டத்தட்ட 72,350 எக்டேயர்களைக் கொண்ட வளம்மிக்க வளர்ப்பு காடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
(ஈ) சதுப்பு நிலக் காடுகள் உட்பட.
(உ) மதிப்பீடுகள்.
(ஊ) பங்கேற்பு காடாக்கல் செயற்றிட்டத்தில் உள்ள பரப்புக்கள் நீங்கலாக.

மூலம்: காட்டுத் திணைக்களம்.

யிலிருந்ததுடன் ரூ.2.8 மில்லியன் வாடகையாகப் பெறப்பட்டது. நாற்றுமேடை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 7500 கி.கிறாம் விதைகள் சேகரிக்கப்பட்டதுடன் மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2.1 மில்லியன் மரக்கன்றுகளும் பெறப்பட்டன. மீளவெட்டுவதற்காக 675 எக்டேயர் காட்டுநிலம் அரச மரக்கூட்டுத் தாபனத்திற்கு விடுவிக்கப்பட்டது.

தனியார்துறை உயர்ந்த பெறுமதி கொண்ட மர இனங்களை நடுகை செய்வதன் மூலமாக தனியார் காட்டு மரநடுகைகளைத் தொடங்கியுள்ளனர். சில பெருந்தோட்ட முகாமைத்துவப் பணிகளும் அவர்களது உற்பத்தியாக்கம் குறைந்த பெருந்தோட்டங்களில் காட்டு மரநடுகைகளுக்குப் பன்முகப்படுத்துவதில் ஈடுபாடு காட்டிவருகின்றன. இது முதலீட்டாளருக்கு நிச்சயமான வருமானத்தினை உருவாக்குவதுடன் எமது தேசிய காட்டினை அழிக்காமல் உள்நாட்டுத் தேவைகளுக்கு மரம் கிடைப்பதனை அதிகரிக்கச் செய்யுமாகையால் இதனை ஊக்குவிக்க வேண்டும். விறகிற்குப் பயன்படுத்தக்கூடிய வகைகளை வலுவுக்கான மூலமாகக் கருதி அவற்றை பயிர்செய்வதனையும் ஊக்குவிக்கும் தேவை காணப்படுகின்றது.

அரச மரக்கூட்டுத்தாபனம் அரசதுறைக்கும், பொதுமக்களுக்கும் தொடர்ந்தும் மரங்களை வழங்கி வருகின்றது. 2001ஆம் ஆண்டுப் பகுதியில் அரச மரக்கூட்டுத்தாபனத்தின் மரக்குற்றிகள், அரியப்பட்ட பலகை மற்றும் விறகு என்பனவற்றின் மொத்த வெளியீடு 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 259,521 மீற்றர்களுக்கு 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.